REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2022 மே 12 வியாழக்கிழமை
THINAKARAN தினகரන්
1932 - 2022
வரு. 90 இல. 110 | Thursday 12, May, 2022 | 12பக்கங்கள் | 40/-




நிலையான அரசாங்கம் விரைவில் அமைக்கப்பட வேண்டும்

## சட்டம், ஒழுங்கு சீர்குலைந்தால் மேலும் பொருளாதார நெருக்கடி

நாட்டில் சட்டம் ஒழுங்கு முறையாக செயற்படுத்தப்படாவிடின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரோ, நிதியமைச்சரோ இல்லை, செயற்படாத நிலையில் பாராளுமன்றம் , நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மாத்திரம் உள்ள ஒரு செயலிழந்த நிலை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான அரசாங்கமொன்று விரைவில் அமைக்கப்பட வேண்டும் எனவும் இது 225 மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதியின் முக்கிய பொறுப்பு எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் சட்டம் மற்றும் 08




மக்களால் தெரிவான தலைவர் என்பதால்

## மஹிந்தவை பாதுகாப்பது முப்படையினரதும் கடமை

இராணுவத்தளபதி தெரிவிப்பு

ஸாதிக் ஷிஹான்

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாப்பது அரசியலமைப்பின் படி முப்படையினருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள கடமையாகும் என இராணுவத்தளபதி ஜெனரல் 08



## மஹிந்த ராஜபக்ஷ திருமலை கடற்படை முகாமில்!

பாதுகாப்புச் செயலாளர் உறுதிப்படுத்தினார்



ஸாதிக் ஷிஹான்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையிலுள்ள கிழக்கு கடற்படைக் கட்டளைத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்தார். 08

# இவ்வாரத்துக்குள் பிரதமரையும் அமைச்சரவையும் நியமிக்க முடிவு

### நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்ட அதேபோல் நாட்டு மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய பிரதமரொருவரையும் அமைச்சரவை ஒன்றையும் இவ்வாரத்திற்குள் நியமிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது,

நியமிக்கப்படும் புதிய அரசாங்கத்தின் பிரதமர் புதிய வேலைத்திட்டமொன்றை சமர்ப்பித்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிடைக்கும் வகையில் 19 ஆவது திருத்தம் உள்ளடக்கப்பட்டு அரசியல் திருத்தம் மேற்கொள்ளப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பில் திட்டமிட்ட ஒத்துழைப்பு வழங்கிய, பிரசாரம் செய்த அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். இன்று நாங்கள் நாட்டின் வரலாற்றில் மிகவும் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்த நிலைமை தோன்றுவதற்கு முதல் காரணம் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் முகங்கொடுத்த பிரச்சினையால் சமூக அரசியல் ஸ்திரமற்ற நிலை தோன்றியதேயாகும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக பல்வேறு தரப்பினரும் முன்வைத்த பொது யோசனையானது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரும்பான்மை கட்சிகளைச் சேர்த்து புதிய அரசாங்கமொன்றை அமைப்பதேயாகும். கடந்த காலங்களில் நான் இதற்காக பல்வேறு கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடினேன்.

## இலங்கையில் அமைதி நிலவ இந்திய கலைஞரின் முயற்சி




மணலில் ஓவியம் செதுக்கி கவனயீர்ப்பு



## இலங்கை அரசியல்வாதிகள் எவரும் இந்தியா செல்லவில்லை

ஊடக செய்திகளுக்கு தூதரகம் மறுப்பு 03

## சகோதரத்துவத்தின் பிரகாரம் உதவிக்கரம் நீட்டவேண்டும்

சீனத்தூதுவரிடம் சஜித் பிரேமதாச கோரிக்கை



இலங்கைக்கான சீனத் தூதுவர் கீய் ஸென்ஹொன் (Qi Zhenhon) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று (11) காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நிலைமை தொடர்பில் விரிவாக 08

ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ளது:

## பொது இடங்களில் கூட்டமாக இருப்பது குற்றச் செயலாகும்

காலிமுகத்திடலில் பொலிஸார் அறிவிப்பு



ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப் பகுதியில் பொது இடங்களில் ஒன்று கூடுவது குற்றமாகும் என காலிமுகத்திடலிலுள்ள கோட்டா கோ கமவுக்கு பொலிஸார் ஒலிபெருக்கி ஊடாக 08

## நாட்டின் பல பாகங்களிலும் முப்படையினர் பாதுகாப்பில்

கவச வாகனங்களில் ரோந்து நடவடிக்கை



கொழும்பு நகரம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பாகங்களில் இராணுத்தினரால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கவச வாகனங்களுடன் நேற்று காலை முதல் கொழும்பு நகரில், கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது.

அத்துடன், விசேட 08

## GCE (O/L) பரீட்சைகள் திட்டமிட்டவாறு நடைபெறும்

பரப்பப்படும் செய்திகளில் உண்மையில்லை

2021 ஆம் கல்வி ஆண்டுக்கான, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை பிற்போடப்படுவது தொடர்பில் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவ்வாறு பரப்பப்படும் தகவல்களில் உண்மை இல்லை எனவும் பரீட்சைகள் திணைக்களம் 08

## இடைக்கால நிர்வாகத்தை ஏற்பதற்கு தே.ம.ச தயார்

தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் அரசியல் முடக்கம் மற்றும் அராஜகத்தை தீர்ப்பதற்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்கினால் ஆறு மாத காலத்திற்கு இடைக்கால அரசாங்கத்தை அமைத்து அதனை தீர்க்கும் பொறுப்பை ஏற்க தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக 08

## வன்முறைக்குப் பதிலாக அமைதி காப்போம்

சஜித் பிரேமதாச கோரிக்கை



வன்முறையால் நாடு அழிவையே அடைவாகப் பெறும் எனவும், பல தசாப்தங்களாக நாடு இத்தகைய அழிவை அனுபவித்தது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று 08

## ஜனாதிபதி பதவி விலகினாலேயே பிரதமர் பதவியை சஜித் ஏற்பார்

SJB ஊடக மாநாட்டில் லக்ஷ்மன் கிரியெல்ல



ஜனாதிபதி பதவி விலகினால் மாத்திரமே சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்பார் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் நேற்று (11) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும், அதன் பின்னர் 08

## வன்முறைகளுக்கு காரணமாக இருந்தோருக்கு பயணத்தடை

விதிக்கக் கோருகிறது சட்டத்தரணிகள் சங்கம் 03

சில ஊடக செய்திகள் குறித்து மறுப்பு:

## இந்திய படைகளை இலங்கைக்கு அனுப்பும் எண்ணம் இல்லை

03

## போலி தமிழ் தேசியவாதிகளை தோற்கடிக்க சபதமெடுப்போம்

த.தே.ம.மு ஊடக பேச்சாளர் சுகாஷ்



"நாட்டின் இந்த நிலைமைக்கும் தமிழ்த் தேசத்தின் அவலத்திற்கும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்குள் மறைந்திருந்து அரச நிகழ்ச்சி நிரலைக் கனகச்சிதமாக நகர்த்துபவர்களும் 08

## துப்பாக்கி சூட்டு உத்தரவு சட்டவிரோதமான ஒன்று

எம்.ஏ. சுமந்திரன் MP தெரிவிப்பு



சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது முப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்கிற உத்தரவு சட்டவிரோதமானது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் 08

## சஜித் பிரதமராவதற்கு SLFP ஆதரவளிக்கும்

தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்கத் தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பு அறிவித்துள்ளது. ஸ்ரீ லங்கா 08

## முள்ளிவாய்க்காலில் கண்காணிப்பு தீவிரம்

இராணுவத்தினர் உஷார் நிலையில்



இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதி மற்றும் அதனைச்சூழ இராணுவத்தினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது 08

## 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

கட்டட ஆய்வு நிறுவகம் எச்சரிக்கை



பலத்த மழையினால் 4 மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளுக்கு மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளது. 08

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனில் நீண்ட போருக்கு தயாராகும் விளாடிமிர் புட்டின்

### அமெரிக்க உளவுப் பிரிவு தகவல்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரைனில் அந்நாட்டின் கிழக்கில் வெற்றி பெற்றபோதும் கூட நீண்ட கால போர் ஒன்றுக்கு தயாராவதாக அமெரிக்க உளவுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு உக்ரைனை ரஷ்யா கைப்பற்ற முயற்சிக்கும் நிலையில் அங்கு உக்கிர மோதல்கள் இடம்பெற்று வரும் சூழலிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் தலைநகர் கியேவை கைப்பற்றும் முயற்சிக்கு உக்ரைனிய படையிடம் இருந்து கடும் எதிர்ப்பு வந்ததை அடுத்தே டொன்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்றுவதில் ரஷ்யத் துருப்புகள் அவதானம் செலுத்தியுள்ளன.

இந்த சூழலில் ரஷ்யத் துருப்புகள் முட்டுக்கட்டையை சந்தித்திருப்பதாக அமெரிக்க உளவுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமெரிக்க செனட் குழு விசாரணையில் கருத்துக் கூறிய



தேசிய உளவுத் துறை பணிப்பாளர் அவ்ரில் ஹெய்னஸ் கூறியதாவது, ‘டொன்பாசுக்கு அப்பாலும் செயற்பட புட்டின் திட்டமிட்டுள்ளார். ஆனால் அவரது எதிர்பார்ப்புக்கும் ரஷ்ய இராணுவத்தின் தற்போதைய திறனுக்கும் இடையே முரண்பாடு உள்ளது’ என்றார்.

பண வீக்கம், உணவு பற்றாக்குறைகள் மற்றும் எரிசக்தி விலை மோசமடைதல் உக்ரைனுக்கான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி பலவீனமடைவதற்கு காரணமாக இருக்கும் என்று ரஷ்ய ஜனாதிபதி கணித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் போர் தொடர்வதால் ரஷ்ய ஜனாதிபதி கடுமையான வழிமுறைகளுக்கு திரும்பக் கூடம் என்றும் ரஷ்யாவின் இருப்பு தொடர்பில் புட்டின் அச்சுறுத்தலை உணர்ந்தால் மாத்திரமே ரஷ்யா அணு அயுதத்தை பயன்படுத்தக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதே விசாரணையில் கருத்துக் கூறிய பாதுகாப்பு புலனாய்வு நிறுவன பணிப்பாளர் ஸ்கொட் பரிர், ரஷ்யர்கள் மற்றும் உக்ரைனியர்கள் இழுபறியை சந்தித்திருப்பதாகக் கூறினார்.

புதிய போர் நடவடிக்கைகளில் வட கிழக்கு கார்கிவ் பிராந்தியத்தில் நான்கு குடியிருப்புப் பகுதிகளை மீட்டதாக உக்ரைன கூறியுள்ளது.

போர் ஆரம்பித்தது தொடக்கம் கடும் குண்டு தாக்குதலுக்கு இலக்காகி வரும் கார்கிவ் நகரில் இருந்து ரஷ்ய துருப்புகளை உக்ரைன் வெற்றிகரமாக படிப்படியாக பின்வாங்கச் செய்து வருவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## ஷங்ஹாயில் நுழைவு பரீட்சை ஒத்திவைப்பு



கொரோனா தொற்று பரவல் காரணமாக சீனாவின் சங்ஹாய் மாநகர அரசு கல்லூரி மற்றும் சிரேஷ்ட உயர் பாடசாலை நுழைவுப் பரீட்சைகளை ஒரு மாதத்திற்கு பிற்போட்டுள்ளது.

வரும் ஜூலை 7 தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெறும் கல்லூரி நுழைவு பரீட்சைகளுக்காக 50,000க்கும் அதிகமானவர்கள் தோற்றுகின்றனர். அதேபோன்று வரும் ஜூலை 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறும் சிரேஷ் உயர் பாடசாலை நுழைவு பரீட்சையில் 110,000 மாணவர்கள் தோற்றுகின்றனர். சீனாவின் வர்த்தக மையமாக இருக்கும் ஷங்ஹாய் நகர் நாட்டின் கொரோனா தொற்றின் மையப் புள்ளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாய்வான் குறித்து மாவோவின் கருத்து



சீன கம்யூனிச கட்சியின் தலைவர் மாவோ சேதுங் தாய்வான் மீது உரிமை கோருவதை மறுத்தார் என்று நெதர்லாந்து முன்னாள் இராஜதந்திரி ஒருவரான கெரிட் வான் டெர் வீஸ் தெரிவித்துள்ளார்.

தாய்வான் நிலை குறித்து காலப்போக்கில் சீனாவின் நிலைப்பாட்டில் வெளிப்படையான வரலாற்று முரண்பாடு ஏற்பட்டமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 1937 இல் அமெரிக்க ஊடகவியலாளர் எட்கர் ஸ்சோவுக்கு அளித்த பேட்டியில் மாவோ சேதுங் கூறியதாவது, ‘அவர்களின் (கொரியர்கள்) சுதந்திரப் போராட்டத்திற்கு உதவுவதில் நாம் உற்சாகமடைகிறோம். தாய்வானுக்கும் அதே நிலை பொருந்தும்’ என்று அவர் கூறியிருந்தார் என்பதை டெர் வீஸ் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

## டிரம்பின் ட்விட்டர் தடையை நீக்க இலோன் மஸ்க் திட்டம்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீதான ட்விட்டர் தடையை நீக்கப்போவதாக செல்வந்தர் இலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

தாம் ட்விட்டர் நிறுவனத்தை வாங்கிய பின் அந்த மாற்றத்தைக் கொண்டு வரவிருப்பதாக மஸ்க் குறிப்பிட்டார்.

உலகின் மிகப்பெரிய செல்வந்தரான மஸ்க், 44 பில்லியன் டொலருக்கு ட்விட்டர் நிறுவனத்தை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளார்.



ஒப்பந்தம் நிறைவடைந்ததும் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தின் தற்காலிக தலைமை நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்பார் என்று கூறப்படுகிறது.

ட்விட்டர் கணக்குகளை நிரந்தரமாகத் தடைசெய்வது அரியதாக இருக்க வேண்டும் என்று பைனான்ஸ் டைம்ஸ் மாநாட்டில் மஸ்க் குறிப்பிட்டார். ட்விட்டரின் இணை நிறுவனரான ஜேக் டோர்சியும் அதே கருத்தைக் கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

ட்விட்டர் தளத்திலிருந்து டிரம்ப்பைத் தடை செய்தது தவறு என்றும் அறிவற்ற முடிவு என்றும் மஸ்க் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்க பாராளுமன்றம் தாக்கப்பட்டதை அடுத்து, டிரம்ப்பின் ட்விட்டர் கணக்கு நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டது.

யாரேனும் சட்டவிரோதமான அல்லது உலகுக்கு அழிவை ஏற்படுத்தும் ஏனைய பதிவுகளை ட்விட்டரில் இட்டால் தற்காலிக இடைநிறுத்தம் அல்லது அந்தப் பதிவு மறைக்கப்பட வேண்டும் என்று மஸ்க் குறிப்பிட்டார்.

## கழிப்பறையிலிருந்து பாராளுமன்ற அமர்வில் பங்கேற்ற எம்.பி மன்னிப்பு

கனடாவில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், கழிப்பறையிலிருந்து பாராளுமன்றச் சந்திப்பில் கலந்துகொண்டதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஷப்கத் அலி காணொளி அழைப்பு மூலம் சந்திப்பில் கலந்துகொண்டபோது, சக உறுப்பினர்கள் நன்கு பழக்கப்பட்ட கழிப்பறைச் சுவரை அடையாளம் கண்டுள்ளனர்.

அதை அடுத்து அனைத்து உறுப்பினர்களும் தங்கள் கருவிகளைக் கவனத்துடன் பயன்படுத்துமாறும் காணொளி அழைப்பின்போது எங்கு இருக்கின்றோம் என்பதை நினைவு கூருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.



அலி நடந்த சம்பவத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அந்தத் தவறு மீண்டும் நிகழாது என்று அவர் உறுதி அளித்தார்.

55 வயது அலி கடந்த ஆண்டு லிபரல் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லிபரல் எம்.பி ஒருவர் சூம் தொழில்நுட்பத்தின் வழியான சந்திப்பில் தர்மசங்கட சூழலை சந்திப்பது கடந்த இரண்டு ஆண்டுகளில் இது இரண்டாவது முறையாகும்.

கடந்த ஆண்டு மெய்நிகர் வடிவில் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் சிறுநீர் கழித்தபடி பங்கேற்ற லிபரல் எம்.பி வில் அமோஸ் தனது செயலுக்காக மன்னிப்புக் கேட்டார்.

இந்த சம்பவம் நிகழ்வதற்கு ஒரு மாதத்திற்கு முன் அவர் சகாக்களுடனான காணொளி அழைப்பில் நிர்வாணமாக தோன்றினார். தொடர்ந்து அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலியப் படையால் 'அல் ஜசீரா' பெண் செய்தியாளர் சுட்டுக் கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான ஜெனினில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் சுற்றிவளைப்பு தேடுதலில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த அல் ஜசீரா பெண் செய்தியாளர் ஷெரீன் அபூ அக்லே, இஸ்ரேலிய படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

51 வயதான அபூ அக்லே, வேண்டுமென்று பழிவாங்கும் நோக்கத்துடன் இஸ்ரேலிய துருப்புகளால் சுடப்பட்டிருக்கிறார் என்று கட்டாரைத் தளமாகக் கொண்ட அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

செய்தியாளரை தமது படை இலக்கு வைக்கவில்லை என்று இஸ்ரேலிய இராணுவம் மறுத்துள்ளது.

பலஸ்தீன துப்பாக்கிதாரிகளுடனான சண்டையின்போது அவர் மீது துப்பாக்கி குண்டு பாய்ந்திருக்க வாய்ப்பு இருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

அபூ அக்லேவின் மரணம் கவலை அளிப்பதாகவும் பலஸ்தீன அதிகார சபையுடன் இணைந்து கூட்டு விசாரணை நடத்துவதற்கும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் யயிர் லபிட் அழைப்பு விடுத்தார்.

‘மோதல் வலயங்களில் ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு உண்மையை கண்டறிவதற்கு நாம் அனைவரும் கடப்பாடு பெற்றிருக்கிறோம்’ என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கான அங்கி மற்றும் தலைக்கவசத்தை அணிந்திருந்த வேளையிலேயே அபூ அக்லேவின் முகத்தின் மீது சுடப்பட்டிருக்கிறது என்று கட்டார் பிரதி வெளியுறவு அமைச்சர் லொல்வா அல் கட்டர் தெரிவித்துள்ளார்.

அபூ அக்லேவின் மரணத்தை உறுதி செய்திருக்கும் பலஸ்தீன சுகாதார அமைச்சு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதை அடுத்து ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக குறிப்பிட்டது.

அல் ஜசீரா அரபுச் சேவையில் முக்கிய புள்ளியாக அபூ அக்லே இருந்து வந்தார். கடந்த 15 ஆண்டுகளாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினை பற்றி அவர் செய்தி சேகரித்து வந்துள்ளார்.

இஸ்ரேலில் பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலிய அரபிகளின் தாக்குதல் அலை அண்மைக் காலத்தில் தீவிரம் அடைந்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் 17 இஸ்ரேலியர்கள் மற்றும் இரு உக்ரைன் நாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் இஸ்ரேலிய படையின் சுற்றிவளைப்பு தேடுதல்கள் அல்லது தாக்குதல்தாரிகள் மீதான துப்பாக்கிச் சூடுகளில் குறைந்தது 26 பலஸ்தீனர்கள் அண்மைய வாரங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதல்களுக்கு வந்தவர்களில் நால்வர் ஜெனின் நகரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்த நகரில் இஸ்ரேலில் தேடுதல்கள் தீவிரம் அடைந்துள்ளது.

## குடியிருப்பாளருக்கு 360,000 டொலரை தவறுதலாக வழங்கிய ஜப்பான் நகரம்

ஜப்பானிய நகரம் ஒன்று அங்குள்ள குடியிருப்பாளர் ஒருவருக்கு 360,000 டொலர் நிதி உதவியை தவறுதலாக அளித்த நிலையில் அதனை திருப்பித்தர அவர் மறுத்ததால் சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளது.

‘குடியிருப்பாளருக்கு ஏற்பட்ட பிரச்சினைக்காக நாம் வருந்துகிறோம். இந்த குடியிருப்பாளருக்கு எதிராக நாம் வழக்குத் தொடுக்கவுள்ளோம்’ என்று அபு நகர அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார். வியாழக்கிழமை (இன்று) நடைபெறும் மாநகர சபை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.



மேற்கு யமகுச்சி மாகாணத்தில் கடந்த மாதம், பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் உடைய 463 பேரில் ஒவ்வொருவருக்கும் 100,000 யென் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நடைமுறையின் போது, அவர்கள் ஒரு குடியிருப்பாளருக்கு மாத்திரம் தவறுதலாக 46.3 மில்லியன் யென் பணத்தை அளித்துள்ளனர். பின்னர் அவர் உடன் அடையாளம் காணப்பட்டு அந்தப் பணத்தை திரும்ப அளிக்கும்படி கோரப்பட்டுள்ளார்.

இது பற்றி பல கடிதங்கள் மற்றும் அழைப்புகள் விடுக்கப்பட்டபோதும் அந்தப் பணம் திரும்பக் கிடைக்கவில்லை.

பின்னர் நேரடியாக அந்த குடியிருப்பாளரை அதிகாரிகள் சந்தித்தபோது அந்தப் பணத்தை எடுத்ததை ஒப்புக்கொண்டிருக்கும் அவர் அதனை திரும்பத் தரமுடியவில்லை என்றும் அதற்கு பரிகாரம் செய்யத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜூலை இறுதியில் எல்லையை திறப்பதற்கு நியுசிலாந்து முடிவு



நியுசிலாந்து அதன் சர்வதேச எல்லைகளை ஜூலை மாத இறுதியில் மீண்டும் முழுமையாகத் திறக்கவுள்ளது.

அதே நாளில் சொகுசுக் கப்பல் சேவைகளும் ஆரம்பிக்கப்படும் என்று அந்நாட்டின் பிரதமர் ஜசிண்டா ஆர்டன் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக வரும் செப்டம்பர் மாத இறுதியிலேயே நியுசிலாந்தின் எல்லைகளை மீண்டும் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அவற்றை முன்கூட்டியே திறக்க தற்போது அறிவிப்பு வந்துள்ளது.

விசா அனுமதி பெறத் தேவைப்படுவோர் அங்கு மீண்டும் செல்லலாம்.

எல்லைகளை மீண்டும் திறப்பதால் உடனடித் திறன்களுக்கான பற்றாக்குறைகள் தீரும் என்று ஆர்டன் கூறினார்.

ஒக்லாந்தில் வர்த்தகச் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்ட அவர் அவ்வாறு தெரிவித்தார்.

நியுசிலாந்தின் சுற்றுப்பயணத்துறைக்குப் புத்துயிரூட்டுவதோடு, குடியேறிகளின் விவகாரத்தையும் வலுப்படுத்த முடியும் என்றார் ஆர்டன்.

நாட்டில் பொருளாதார எதிர்காலத்தை உறுதிசெய்ய, ஏற்கனவே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மேம்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 12 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.35 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.33 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 29

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: ஏகாதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | நன்மை |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | செலவு |
| கன்னி | முயற்சி |
| துலாம் | கோபம் |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பாராட்டு |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

பாப்பரசர் விடுத்துள்ள அழைப்பு

# மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவும்

இலங்கையில் அமைதிக்கு பாப்பரசர் பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆளும் அரசியல் தலைவர்கள் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்த்து, மனித உரிமைகள் மற்றும் குடியியல் உரிமைகளுக்கு முழு மரியாதையை உறுதிப்படுத்தவேண்டும் என்று பொறுப்புகள் உள்ள அனைவரையும் தாம் கேட்டுக்கொள்வதாக பாப்பரசர் கோரியுள்ளார்.



வன்முறைக்கு அடிபணியாமல், அமைதியான அணுகுமுறையைப் பேணுமாறு அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வன்முறைகளுக்கு காரணமாக இருந்தோருக்கு பயணத்தடை

## விதிக்கக் கோருகிறது சட்டத்தரணிகள் சங்கம்

அலரி மாளிகையிலிருந்து வன்முறைகளை கட்டவிழ்த்துவிட தூண்டியவர்கள், சதி செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும் எனவும் அவர்களுக்கு எதிராக பயணத்தடைகளை பொலிஸார் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

திங்கட்கிழமை (09) அலரி மாளிகைக்கு அருகிலும் காலிமுகத் திடலிலும் ஆர்ப்பாட்டங்கள் மீது அலரி மாளிகையிலிருந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை தான் கண்டிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

ஆர்ப்பாட்டக்களங்கள் மீதான தாக்குதல்களானவை, ஆட்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்குச் சொந்தமான சொத்துகள் மீதான முன்னெப்போதுமில்லாத வகையிலான தாக்குதல்களை கட்டவிழ்த்து விடப்படுவதற்கும் தூண்டியுள்ளது. இதனால் மரணங்கள், காயங்கள், அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்களின் நம்பிக்கையை மீள ஸ்தாபிப்பதற்கும் அமைதியை 08

# நாட்டில் சுமுக நிலைமையை ஏற்படுத்த மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை

## பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதி கூட்டாக வேண்டுகோள்




**ஸாதிக் ஷிஹான்**

நாட்டில் அமைதி மற்றும் சுமுக நிலைமையை ஏற்படுத்தவும் முப்படையினர் மற்றும் பொலிஸார் தமது கடமைகளை உரியமுறையில் நிறைவேற்றவும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோர் பொதுமக்களிடம் கூட்டாகவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டில் தொடர்ந்தும் வன்முறை மற்றும் அராஜகத்தை ஏற்படுத்த ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அலரிமாளிகை, காலிமுகத்திடல் பகுதியில் இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவத்தையடுத்து கடந்த சிலநாட்களாக மிகவும் மோசமான விதத்தில் நாடளாவிய ரீதியில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின. இவ்வாறு வன்முறையில் ஈடுப்பட்டவர்கள், வன்முறையை தூண்டியவர்கள், உயிர் பலி ஏற்படுத்தியவர்கள், பாதுகாப்பு தரப்பினர் மீதுதாக்குதல் நடத்தியவர்கள், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதமிழைத்தவர்கள் தேடி கைது செய்யப்பட்டு சட்டத்திற்கு முன்னர் நிறுத்தப்படுவர் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நாட்டுமக்களுக்கு தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் மாநாடு பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் தலைமையக 08

# இலங்கை அரசியல்வாதிகள் எவரும் இந்தியா செல்லவில்லை

**ஊடக செய்திகளுக்கு தூதரகம் மறுப்பு**



குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளும் அவர்களின் குடும்பத்தினரும் இந்தியாவுக்கு சென்றிருப்பதாக ஊடகங்கள் சிலவற்றிலும், சமூக ஊடகங்களிலும் பகிரப்படும் செய்திகளை அவதானித்துள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

உயர்ஸ்தானிகரகத்தின் உத்தியோகபூர்வ ட்விட்டர் தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்றும் எந்தவிதமான உண்மைகளோ அல்லது அர்த்தங்களோ இல்லாதவையாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செய்திகளை மறுக்கும் அதேவேளை, வன்மையாக கண்டிப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

# தொழிற்சங்க வேலை நிறுத்தம் நேற்று கைவிடப்பட்டது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலிமுகத்திடல் மோதல் சம்பவங்களை கண்டித்து நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்களும் மேற்கொண்டிருந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் அத்தியாவசிய சேவைகளை கருத்திற் கொண்டு தாம் தமது தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்றுடன் (நேற்று) கைவிடத் தீர்மானித்துள்ளதாக மேற்படி தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து நேற்றைய தினம் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டதுடன் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் வழமையான சேவைகளை தொடரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அதற்கிணங்க துறைமுகம், சுகாதாரம், கல்வி, 08

சில ஊடக செய்திகள் குறித்து மறுப்பு

# இந்திய படைகளை இலங்கைக்கு அனுப்பும் எண்ணம் இல்லை

## இந்திய உயர்ஸ்தானிகர் டுவிட்டரில் தெரிவிப்பு

இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பும் எண்ணம் எதுவும் இந்தியாவுக்கு இல்லை என்றும், இது தொடர்பாக பல்வேறு ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை நிபந்தனையின்றி நிராகரிப்பதாகவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தியோகபூர்வ ட்விட்டரின் ஊடாக இவ்விடயத்தை தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றுக்கு இந்தியா பூரணமாக ஆதரவளிப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் நேற்றுமுன்தினம் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்திகளும் நோக்குகளும் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டவை அல்லவென இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரான சுப்ரமணியன் சுவாமி நேற்று ட்விட்டர் பதிவொன்றை இட்டிருந்தார்.

இலங்கையில் தற்போது நிலவும் அமைதியின்மையைத் தணிக்க இந்தியப் படையினர் களமிறங்க வேண்டும் என அவர் 08

# மறு அறிவித்தல்வரை எரிபொருள் விநியோகம் தற்காலிக இடைநிறுத்தம்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

எரிபொருள் விநியோகத்தை இலங்கை பெற்றோலியகூட்டுத்தாபனம் (CPC) தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மற்றும் தற்போதைய பாதுகாப்பு நிலைமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை அமைதியின்மை ஏற்பட்டதைத் தொடர்ந்து இன்று (12) காலை 07 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது.

நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் இராணுவத்தினரும் களமிறக்கப்பட்ட போதிலும் பல பகுதிகளில் அவ்வப்போது வன்முறைச் சம்பவங்களும் பதற்றமான சூழ்நிலைகளும் பதிவாகி வருகின்றன.

ஏற்கனவே எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போது நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டு எரிபொருள் விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

# வன்முறை நீடித்தால் சுகாதார சேவை சிக்கல்

**இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை**

நாட்டில் வன்முறை நிலைமை நீடிக்குமாயின், சுகாதார கட்டமைப்பின் கொள்ளளவுக்கு அப்பால், நபர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படக்கூடிய அபாய நிலை உள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலைமைக்கு மத்தியில் இந்த அபாயம் 08

# பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மீதான தாக்குதல்; இருவருக்கு விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு கங்காராம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின் போது மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை தாக்கியதாக கைது செய்யப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களுக்கும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் விளக்கமறியல் தண்டனை வழங்கியுள்ளது.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை இன்று 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் மீதான தாக்குதல் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதுடன் நேற்றுக் காலை மேற்படி இரண்டு சந்தேக நபர்களையும் கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பு கங்காராம பகுதியில் கூடியிருந்த சனக் கூட்டத்தை கலைப்பதற்காக பொலிசார் மேல் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகவும் அதன்போது அங்கிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குழுவொன்றினால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அதன்போது சிவில் உடையில் இருந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், தப்பியோட முயன்ற போதிலும் மேற்படி குழுவினர் அவரைப் பின் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பின்னர் அங்கிருந்து அவரை பொலிசார் பாதுகாப்பாக அவரது காரில் அனுப்பி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது (ஸ)

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் சாத்தியம்

# வன்முறைகளை கைவிட்டு அமைதியை கடைப்பிடிக்குமாறு அரசு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்படும் சாத்தியம் காணப்படுவதுடன் கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிசாருடன் முப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருவதுடன் வீதி சோதனைகள் விசேட செயலணியின் பாதுகாப்பு உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவிய குழப்பகரமான சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அமைதி சூழ்நிலையை பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் முப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்றைய தினம் கொழும்பு உட்பட நாடளாவிய பல்வேறு பிரதேசங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பொலிசாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் கொழும்பு உட்பட சில பிரதேசங்களில் இராணுவ கவச வாகனங்களும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவ விசேட செயலணியினரின் மோட்டார் சைக்கிள் பிரிவினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் முக்கிய நகரங்களில் சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு இராணுவத்தினர் வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கைகளும் நேற்று பலப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் குறிப்பிடத்தக்க வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத போதும் நீர்கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் கொழும்பில் 08

# அமைச்சுகளுக்கான செயலாளர்களாக மீண்டும் நியமனம்

பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுகளுக்கான செயலாளர்கள் மீண்டும் அதே பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற மேஜர் கமல் குணரத்னவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுப்பெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் டி அல்விஸும், நிதியமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்தனவும் தொடர்ந்தும் செயற்படவுள்ளனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 |
| குவைத் டினார் | 1,188.53 |
| ஓமான் ரியால் | 947.41 |
| கட்டார் ரியால் | 99.83 |
| சவூதி ரியால் | 97.24 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 29ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 10

### குறள் தரும் சிந்தனை



இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

## அமைதியை விரும்பும் மக்களுக்கு வேதனை அளிக்கும் சம்பவங்கள்!

கடந்த 09ஆம் திகதி உருவெடுத்த வன்முறைக் கலவரத்தின் விளைவாக நாட்டின் இயல்பு நிலை நேற்று மூன்றாவது நாளாகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நாட்டில் நேற்று மூன்றாவது நாளாகவும் ஊடரங்கை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அலரி மாளிகைக்கு முன்பாகவும் காலிமுகத்திடலிலும் இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக நாடு ஒருவித பதற்ற நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. இதன் விளைவாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 09 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு வாகனங்களுக்கு தீ வைத்த 41 சம்பவங்களும், வாகனங்களை சேதப்படுத்திய 61 சம்பவங்களும், சொத்துகளை சேதப்படுத்திய 136 சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

வன்முறையுடன் கூடிய கலவரத்தின் விளைவாக முன்னாள் பிரதமரின் இல்லம், அவரது பூர்வீக இல்லம் மற்றும் பல அமைச்சர்களதும் பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்களதும் இல்லங்களும் சொத்துக்களும் சேதப்படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அவை மாத்திரமல்லாமல் முன்னாள் பிரதமரது தந்தையான டி.ஏ. ராஜபக்ஷவின் உருவச்சிலை மற்றும் அவரது அரும்பொருட்காட்சியகம் என்பனவும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கலவரத்தின் விளைவாக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாடு கோடிக்கணக்கான பெறுமதி மிக்க சொத்து இழப்புக்கு முகம் கொடுத்துள்ளது. இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாததும், நியாயப்படுத்த முடியாததுமான கண்டிக்கத்தக்க இழப்பாகும்.

வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நாட்டுக்கும் மக்களுக்கும் மிக மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதன் காரணத்தினால் வன்முறையில் ஈடுபட்டோருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சட்ட மாஅதிபர் சஞ்ஜய் ராஜரத்தினம், 'காலிமுகத் திடல் போராட்ட மைதானத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்ப்பற்ற விசாரணையை மேற்கொள்ளுமாறும், அதன் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸ் மாதிபருக்கு எழுத்து மூலம் பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

இவ்வன்முறையுடன் கூடிய கலவரச் சம்பவம் குறித்த விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரும் பொலிஸாரும் ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில் முன்னாள் பிரதமரின் பாதுகாப்புக்கு பொறுப்பான பிரிவின் தலைவர், குறித்த தினத்தன்று அலரி மாளிகையில் நிகழ்வை ஏற்பாடு செய்த ஒருங்கிணைப்பாளர், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. இச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை பலரும் வரவேற்றுள்ளனர்.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டும். அதுவே அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகின்ற மக்களின் விருப்பமாக உள்ளது. வன்முறைகள் எந்தவொரு வடிவில் இடம்பெற்றாலும் அவை கண்டிக்கப்பட வேண்டியவையாகும். வன்முறைகள் ஒரு போதும் அமைதியை ஏற்படுத்தி விடப் போவதில்லை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இந்த மண்ணில் எதிர்காலத்தில் இனியொரு போதும் இடம்பெறாத வகையில், இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுவே இவர்கள் தோற்றுவித்த வன்முறையின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நம்பிக்கை தரும் நிவாரணமாக அமையும் என்பதுதான் மக்களது கருத்தாக உள்ளது.

ஏனெனில் வன்முறைகள் காரணமாக மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகின்றது. அமைதி ஏற்பட வேண்டுமென்பதே மக்களின் வேண்டுதலாக இருக்கின்றது. ஆகவே நாட்டின் சட்டம், ஒழுங்கை எவரும் தமது இஷ்டப்படி கையில் எடுத்து செயற்படக் கூடாது. அதற்கான முயற்சியிலும் கூட ஈடுபடலாகாது. அவற்றை மதித்து கௌரவித்து செயற்படுவதே குடிமக்களின் பொறுப்பும் கடமையுமாகும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வது இன்றியமையாத விடயம்.

editor.tkn@lakehouse.lk

# வாழைச்சேனை காகித ஆலையில் ஏ 4 கடதாசி உற்பத்தி ஆரம்பம்

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையில் ஏ4 கடதாசி உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை கடதாசி ஆலையின் பொது முகாமையாளர் சுதர்மசிறி சூரியதாச தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய தேசிய கடதாசி கம்பனியின் தவிசாளர் விமல் ரூபசிங்கவின் வழிகாட்டலில் வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையில் ஏ4 கடதாசி உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது நாட்டில் கடதாசி தட்டுப்பாடு நிலவியுள்ள நிலையில் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையில் இரவு பகலாக இருபத்து நான்கு மணித்தியாலய வேலை மூலம் ஒரு நாளைக்கு பதினைந்து மெற்றிக் தொன் கடதாசி உற்பத்தி செய்யப்படுவதாகவும் இது எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்கும் என்றும் வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையின் உற்பத்தி முகாமையாளர் வ.சிவாகர் தெரிவித்தார்.

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையின் உற்பத்தி மூலம் கடதாசி ஒரு மாதத்திற்கு சுமார் 300 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இங்கு நூற்று ஐம்பது ஊழியர்கள் வேலை செய்வதாகவும், உற்பத்தித் திறன் அதிகரிக்கும் பட்சத்தில் ஊழியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப் படும் என்றும் வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையின் பொது முகாமையாளர் சுதர்மசிறி சூரியதாச தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடதாசி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தற்போது அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள், பரீட்சைத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உட்பட்ட பல்வேறு திணைக்களங்கள் மூலம் கிடைக்கப் பெறும் கழிவுக் கடதாசிகளை கொண்டு உற்பத்தி இடம் பெற்று வருகின்றது.

"திணைக்களங்கள் மூலம் அதிக கழிவுக் கடதாசிகள் பெறப்படும் பட்சத்தில் மேலும் கடதாசி உற்பத்தியை அதிகரிக்க சந்தர்ப்பம் உள்ளதுடன், கிழக்கு மாகாணத்திலுள்ள தொழிற்சாலை என்ற வகையில் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு தொழில் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொது மக்களிடம் இருந்து பயன்படுத்தாத காட்போட் அட்டைகளை கொள்முதல் செய்கின்றோம். பொதுமக்கள் தங்கள் வீட்டில் சேகரிக்கப்படும் காட்போட் பெட்டிகள், கடதாசிக் கழிவுகள் என்பவற்றினை ஆலைக்கு வழங்குவதன் மூலம் தங்களுக்கு வருமானத்தை பெற்றுக் கொள்வதுடன் ஆலையின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவியாக இருக்கும்" என்று பொது முகாமையாளர் தெரிவித்தார்.







வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையில் வேலை செய்பவர்களுக்கு திறைசேரி மூலம் சம்பளம் வழங்குவதற்கு ஆரம்பத்தில் நிதி வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஆலையின் உற்பத்தி மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து வேலை செய்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருவதுடன், பாரிய சவால்களுக்கு மத்தியில் தேசிய கடதாசி கம்பனியின் தவிசாளர் மற்றும் துறைசார்ந்த உயர் அதிகாரிகள் உட்பட்ட பலரின் ஆலோசனைக்கு அமைய பாரிய வேலைத் திட்டங்கள் மூலம் உற்பத்திகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையின் உற்பத்தி செய்யப்படும் ஏ4 கடதாசி உற்பத்தியானது 70 ஜி.எஸ்.எம் முதல் 80 ஜி.எஸ்.எம் வரை தரத்திலான கடதாசியாக உற்பத்தி செய்யப்படுவதுடன், நாட்டில் விற்பனையில் உள்ள ஏ4 கடதாசியின் விலையினை விட குறைவாக விலையில் விற்பனை செய்யப்படும் என்று தேசிய கடதாசி ஆலையின் பொது முகாமையாளர் சுதர்மசிறி சூரியதாச மேலும் தெரிவித்தார்.

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையின் உற்பத்திகள் அதிகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலைமை உருவாக வேண்டுமாக இருந்தால் பொதுமக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி தங்கள் வீடுகளில் சேகரிக்கப்படும் கழிவுக் கடதாசிகளை எரிக்காமல் அதனை சேகரித்து ஆலைக்கு விற்பனை செய்ய முடியும். அத்தோடு ஆலையில் கடதாசிகளை அரைப்பதற்கு நீராவியை பெறுவதற்கு விறகுகள் தேவைப்படுகின்றன. அதனையும் மக்கள் ஆலைக்கு சேகரித்து விற்பனை செய்ய முடியும்.

"இதன் காரணமாக பொதுமக்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதுடன், தங்களது குடும்ப உறவினர்களுக்கும் தொழில்வாய்ப்பு கிடைப்பதற்கு வழிவகுக்கப்படுகின்றது. இதனால் வெளிநாடுகளுக்கு யாரும் வேலை நிமித்தம் செல்ல வேண்டிய தேவைப்பாடு இடம்பெறாத வண்ணம் காணப்படும். நமது பிரதேசத்திலே நமக்கு தொழில் வழங்கிய ஆலையில் மீண்டும் நாம் தொழில் செய்வதற்கு வழி கிடைத்துள்ளது" என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

**எஸ்.எம்.எம்.முர்ஷித்...**
*(கல்குடா தினகரன் நிருபர்)*

# இந்தியா பொருளாதார உதவிகளையே வழங்கும்; அரசியல்ரீதியில் ஆதரவு வழங்கப் போவதில்லை

## இலங்கை நிலைவரம் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் இன்றைய நிலைமை தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்துள்ளது. இன்றைய சூழலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் குறித்தும் அங்கு ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் இந்திய மத்திய அரசு முதன் முறையாக சில கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளது.

இலங்கை மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தியா முடிவு எடுக்கும் என்று இந்தியா கூறியுள்ளது. இந்திய மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து பொருளாதார உதவிகளைச் செய்யும் என்றும் அதேநேரம் அரசியல் ரீதியிலான ஆதரவை வழங்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில், "அண்டை நாடான இலங்கையுடன் இந்தியா நெருக்கமான வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார ரீதியிலான மீட்டெடுப்பிற்கு இந்தியா முழுமையாக ஆதரவளிக்கிறது. இலங்கை மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாகவே இலங்கைக்கு இந்தியா செய்துள்ள உதவிகளை விபரித்த அவர், "3.5 பில்லியன் டொலர் மதிப்பிலான உதவிகளை இந்தியா இ லங்கைக்கு வழங்கியுள்ளது. உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொ ருட்களின் பற்றாக்குறையைப் போக்க இந்திய மக்கள் உதவி வழங்கியுள்ளனர்" என்று தெரிவித்தார். அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன், கடனை செலுத்தும் காலம் நீடிப்பு என மொத்தம் ஒரு பில்லியன் டொலர் மதிப்பிலான உதவிகளைச் செய்துள்ளது.



இந்திய மத்திய அரசு மட்டுமன்றி, தமிழக அரசும் கூட இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் அரிசி மற்றும் பிற பொருட்களையும் அனுப்பியுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் இலங்கைக்கு உதவுவதாக இந்தியாவும் உறுதியளித்துள்ளது, இது தொடர்பாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கையின் முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரியை கடந்த ஏப்ரல் மாதம் சந்தித்து ஆலோசனை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.சர்வதேச நிதியத்தின் குழு ஒன்று இப்போது கொழும்பில் உள்ள அதிகாரிகளுடன் நிதி உதவி திட்டம் குறித்தும், அதற்கு இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டிய கடுமையான சீர்திருத்தங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

பொருளாதார வீழ்ச்சி மற்றும் உக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இலங்கையில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயம், ஏற்றுமதி மற்றும் சுற்றுலா என இலங்கையின் அனைத்து முக்கிய துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசியல் ரீதியாக எவ்வித ஆதரவும் கொடுக்க முடியாது என்பதில் இந்திய மத்திய அரசு திட்டவட்டமாகவே உள்ளது. இது தொடர்பாக மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "அங்கு அரசியல் சூழல் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் மக்களுக்கு உதவுவதே அர்த்தமுள்ளதாக இருக்கும்" என்று கூறினார்.

மேலும் இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள நிலை காரணமாக அங்கிருந்து வெளியேறும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று இந்திய மத்திய அரசு கவலை கொண்டுள்ளது.


# உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்களை நல்லிணக்க, சமாதான முயற்சிகளில் வழிப்படுத்தல்

## ஒலுவிலில் பயிற்சிப் பட்டறை

'உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்களாகவுள்ள பெண்களை நல்லிணக்கம் மற்றும் சமாதான முயற்சிகளில் வழிப்படுத்தல்' எனும் திட்டத்தின் கீழான பயிற்சிப் பட்டறையொன்று கடந்த 2022.04.08 ஆம் திகதி ஒலுவில் 'கிறீன் வில்லா'வில் இடம்பெற்றது.

சமாதானம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளை பெண்கள் சுயமாக மேற்கொள்வதற்கும், அவற்றுக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு – தீர்வுகளை வகுத்து, நடைமுறைப் படுத்துவதற்குமான திட்ட வரைபை எவ்வாறு தயாரித்தல் என்பது தொடர்பான பயிற்சிப் பட்டறையே அன்றைய தினம் நடத்தப்பட்டது.

'சேர்ச் ஃபோர் கொமன் கிரவுன்ட்' அனுசரணையுடன், பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஊடாக இந்த செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. 'சேர்ச் ஃபோர் கொமன் கிரவுன்ட்' நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஆலோசகர் நளினி ரட்னராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உள்ளூராட்சி அதிகாரி அன்பழகன் குரூஸ், இப் பயிற்சிப் பட்டறையில் வளவாளராகக் கலந்து கொண்டார்.



இத்திட்டத்தின் முதலாம் கட்டப் பயிற்சி ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில், தற்போது பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களின் கிராமங்களில் இது தொடர்பான திட்டங்களை முன்னெடுப்பதற்குரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. திட்டங்களை வகுத்தல், எழுதுதல், வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் ஆகியவை தொடர்பான விளக்கங்கள் இதன் போது வழங்கப்பட்டன. இத்திட்டத்துக்கான உள்ளூர் வளங்களை அடையாளம் காணுதல் தொடர்பாகவும் மேற்படி பயிற்சிப் பட்டறையின் போது விளக்கமளிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 05 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அடுத்தவரை எதிர்பாராமல் தமது வளங்களை தாமே பயன்படுத்தி பயன்களைப் பெற்றுக் கொள்தல் இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இந்தப் பயிற்சிப்பட்டறையினை பாதிப்புற்ற பெண்கள் அரங்கின் திட்ட இணைப்பாளர் கமலவாணி சுதாகரன் நெறிப்படுத்தினார்.

**றிசாத் ஏ. காதர்...**
*(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)*


# முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கு பாடுபட்டவர் பாக்கீர் மாக்கார்

இலங்கை அரசியல் சமூகப் பரப்பில் என்றும் நினைவுபடுத்தக் கூடிய ஒரு மகானாக பாக்கீர் மாக்கார் திகழ்கிறார். 1917 மே மாதம் 12ஆம் திகதி பேருவளை மருதானையில் வைத்தியப் பரம்பரையில் பிறந்த பாக்கீர் மாக்கார், 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார், களுத்துறை மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணியாகத் திகழ்ந்தார். இன, மத பேதமின்றி ஏழைகளுக்கு இலவசமாக நீதிமன்றங்களில் ஆஜராகி நீதியைப் பெற்றுக் கொடுத்தார். இவரது இந்தப் பணி இவருக்கு மாவட்ட மக்கள் மத்தியில் அபிமானத்தை வென்றெடுக்க உதவியது.

சட்டக்கல்லூரி மாணவராக இருக்கும் போதே 1947 இல் பேருவளை நகரசபையில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு தோல்வியுற்றார். தோல்வியைக் கண்டு மனம் தளராத அவர், 1950 இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு நகரசபைத் தலைவர் பதவியை தனது வசம் ஆக்கிக் கொண்டார். பேருவளை நகர சபையூடாக இந்நகரத்தில் புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார்.

பாக்கீர் மாக்கார், முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் பேருவளைத் தொகுதிக்கு ஐ.தே.க. பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். இத்தொகுதிக்கு முஸ்லிம் ஒருவர் அமைப்பாளராக நியமிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதன் மூலம் களுத்துறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழி பிறந்தது.



## தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் 105ஆவது பிறந்த இன்று

1960ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பாக்கீர் மாக்கார், அமோக வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். 1960 ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற அவர், 65ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார். 1970 தேர்தலில் தோல்வியுற்ற அவர், 1977 இல் போட்டியிட்டு இலங்கையிலே ஆகக் கூடுதலான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசில் சபாநாயகராகத் தெரிவானார். 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பின்படி சபாநாயகராகத் தெரிவானார்.

இக்காலகட்டத்தில் பிரித்தானியாவின் இளவரசர் சார்ள்ஸின் திருமணம் நடைபெற்றது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவும் பிரதமர் ஆர்.பிரேமதாசவும் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்கு லண்டன் சென்ற போது, இலங்கையின் பதில் ஜனாதிபதியாக பணிபுரியும் வாய்ப்பு பாக்கீர் மாக்காருக்குக் கிடைத்தது. இலங்கைக்கு பதில் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

பாராளுமன்ற அமர்வு நாட்களில் மட்டும் சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு செல்லும் சம்பிரதாயத்தை மாற்றி, சபாநாயகர் அலுவலகத்தை முழுநேர அலுவலகமாக மாற்றிச் செயற்பட்டார். பாராளுமன்ற வரவுசெலவுகளை கணக்காய்வு அதிபதி மூலம் கணக்காய்வு செய்யும் முறையினை இவர் அறிமுகப்படுத்தினார். காலிமுகத்திடல் பாராளுமன்றத்தின் கடைசி சபாநாயகராகவும் இவரது பெயர் வரலாற்றில் பதிவாகியுள்ளது. மாகாண சபை உருவாக்கப்பட்ட போது, அதன் ஆளுநர்களாக மூத்த அரசியல்வாதிகள் நியமிக்கப்பட்டனர். 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 31ஆம் திகதி இவர் தென் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார், இலங்கை முஸ்லிம்களின் அரசியல் சமூக எழுச்சிக்கு பெரும் பங்காற்றியவராவார். களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம்களுக்காக பேருவளை தொகுதி இவரது வேண்டுகோளின் பேரிலேயே உருவாக்கப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டு வரப்பட முன்னர் பேருவளைத் தொகுதியில் இருந்து ஐ.தே.க. சார்பில் மர்ஹூம் பாகீர் மாகாரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மர்ஹூம் ஐ.ஏ.காதரும் மாறி மாறி தெரிவானார்கள். அங்கு மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதில் இவர் தீவிர அக்கறை காட்டினார். இவர் ஒருமுறை இலங்கை முஸ்லிம்களுக்காக புறம்பான தேர்தல் தொகுதி முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சிகள் உருவாகு முன்னர் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கின்ற அமைப்பாக முஸ்லிம் லீக் வாலிப முன்னணி செயற்பட்டது. கலாநிதி ரீ.பி. ஜாயா, டாக்டர் எம்.சீ.எம்.கலீல் போன்ற தலைவர்களால் வழிநடத்தப்பட்டதாக இந்த இயக்கம் உள்ளது. இந்த அமைப்பின் உபதலைவர்களில் ஒருவராக இருந்த பாக்கீர் மாக்கார், அதன் இளைஞர் அமைப்பினை புறம்பான, சுதந்திரமான ஓர் அமைப்பாக செயற்படுத்த விரும்பினார்.

அதன்படி முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளுக்கு புதிய யாப்பொன்றைத் தயாரித்து அதனை தனியாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். 1978 முதல் நாடளாவிய ரீதியில் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளை உருவாக்கி, பலம்பெறும் சக்திமிகு வாலிப அமைப்பாக உருவாக்கினார். சபாநாயகராக இருக்கும் போது முஸ்லிம் கிராமங்களுக்கு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவ்வப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும், அரசு மூலமும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தார்.

இலங்கையில் ஆகக் கூடுதலான முஸ்லிம் கிராமங்களுக்கு விஜயம் செய்த அரசியல்வாதியாக இவர் திகழ்கிறார். இவர் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைவராக இருக்கும் போது 600 க்கும் மேற்பட்ட கிராமங்களில் முன்னணிகள் அமைக்கப்பட்டன. முஸ்லிம் இளைஞர்கள் இதன் மூலம் தேசிய நீரோட்டத்தில் இணைந்து செயற்படுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

மக்கள் துன்பம் துயரங்களை எதிர்கொள்ளும் போது அவர்களைத் தேடிச் சென்று உதவுவது பாக்கீர் மாக்காரிடம் காணப்பட்ட ஒரு விசேட குணாம்சமாகும். கந்தளாய் குளத்தின் உடைப்பின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மூலம் பெருந்தொகையான பொருட்களைத் திரட்டி எடுத்து வந்து பகிர்ந்தளித்தார்.

சபாநாயகராக, ஆளுநராக, அமைச்சராக நிறைந்த பங்களிப்புச் செய்த ஒரு தலைவராக எமது தந்தையார் பாக்கீர் மாக்கார் அவர்களை நான் காணுகிறேன். அரசியலில் ஊழல் மோசடி இல்லாத அவர், நேர்மையான, களங்கமற்ற ஒரு தலைவராக சகலராலும் இன்றும் மதிக்கப்படுகிறார்.



**இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்...**
*(பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர்)*

# தமிழர்களின் உரிமைகளுக்காக தனது கருத்துகளை தெளிவாக எடுத்துக் கூறியவர் பேராசிரியர் சிவத்தம்பி

"நாங்கள் சமூகத்துக்கு எவ்வளவை கொடுக்கின்றோமோ அவ்வளவைத்தான் நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும்" எனச் சொல்லி வந்தவர்தான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. அவர் தமது இறுதிக் காலத்திலும், உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாமல் அயராமல் இயங்கிய ஆளுமை.

பேராசிரியர் சிவத்தம்பியை முதன் முதலில் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் 1972 இல் நடந்த 'பூரணி' காலாண்டிதழ் வெளியீட்டு நிகழ்வில்தான் சந்தித்தேன். அந்த நிகழ்விற்கு அவர்தான் தலைமை தாங்கினார். அப்பொழுது அவர் தமது குடும்பத்தினருடன் பொரளை கொட்டா ரோட்டில் முன்னாள் நிதியமைச்சர் என். எம். பெரேராவின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் உருவானதும் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் கைலாசபதி 1976 இல் தமிழ்நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கை இரண்டு நாட்கள் ஒழுங்கு செய்திருந்தார். அச்சமயம் ஆய்வரங்கு நிகழ்ச்சிகளுக்குச் சென்றேன்.

சிவத்தம்பியுடன் கலந்துரையாடுவதற்கு அந்த சந்தர்ப்பம் உதவியாகவிருந்தது. ஆய்வரங்குகள் முடிந்த பின்னரும் நான் யாழ்ப்பாணத்தில் நிற்க நேர்ந்தது. ஒருநாள் மாலை யாழ். பஸ்நிலையத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக நின்ற பொழுது சிவத்தம்பி வல்வெட்டித்துறையிலிருந்து வந்த பஸ்ஸில் வந்திறங்கினார். அவர் அன்று வேட்டி அணிந்து மெதுவாக நடந்து புத்தகக்கடைப் பக்கம் வந்தவர், அங்கு நின்ற என்னைக் கண்டு விட்டு, "என்ன டாப்பா, இன்னும் ஊருக்குத் திரும்பவில்லையா?" எனக் கேட்டார். அவரது அந்த 'என்னடாப்பா' என்ற உரிமையும் உறவும் கலந்த குரலை 2011 இல் அவர் மறையும் வரையில் அவரை சந்திக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் கேட்க முடிந்தது.



## நேற்றுமுன்தினம் அன்னாரின் 90 ஆவது பிறந்த தினம்

யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரைப்பணி மற்றும் இலக்கிய விமர்சனத்துறை சார்ந்த அயராத எழுத்துப்பணிகளுக்கு அப்பால், தனது உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாமல் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு மற்றும் வடபிரதேச பிரஜைகள் குழு, யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு முதலானவற்றில் மிகுந்த அர்ப்பணிப்புடன் இயங்கியதை 1983_1987 களில் அவதானித்திருக்கின்றேன். பேராசிரியர் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கமே நின்றார். அதனால், இரண்டு தரப்பினதும் கண்காணிப்புக்கும் ஆளானார். பொறுப்பான மக்கள் நலன் சார்ந்த பிரஜைகள் குழு பதவியிலிருந்துகொண்டு சாதுரியமாக இயங்கினார். அவரது சாதுரியங்கள் கடும் விமர்சனங்களுக்கும் உட்பட்டன. தமிழ் மக்களுக்கு நடந்த பல கொடுமைகளை பேராசிரியர் ஆவணப்படுத்தி ஊடகங்களுக்குத் தந்தார். மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அரசுக்கும் ஆயுதப்படை அதிகாரிகளுக்கும் உடனுக்குடன் எடுத்துரைத்தார்.

சிவத்தம்பி அவர்கள் பேராசிரியராகவும் இருந்தமையால் அவருக்கு இரண்டு தரப்பிலும் ஒரு கனவானுக்குரிய மதிப்பும் மரியாதையும் இருந்தன. பேராசிரியர் கூறிய கத்தியின் மேல் நடக்கும் நிலைக்கு ஆளானார். அக்காலப்பகுதியில் நான் பத்திரிகையில் போர் சம்பந்தப்பட்ட செய்திகளை சேகரித்து எழுதிக் கொண்டிருந்த போது, யாழ்.மாவட்ட நிருபர்கள் ஊடாக கிடைத்த பல செய்தி ஆவணங்களுக்குப் பின்னால் சிவத்தம்பி அவர்களே இயங்கியிருந்தார். சிவத்தம்பி அவர்களின் ஆதாரங்களுடனான ஆவணங்களே தமிழரின் துயரங்களை நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பில் சொல்வதற்கு உதவின.

அவருக்கு 1992 ஆம் ஆண்டு மணிவிழா நடந்த போது நான் 'பாரிஸ் ஈழநாடு' இதழில் அவரைப் பற்றி எழுதி அதன் பிரதியை பிறந்தநாள் வாழ்த்து மடலுடன் அவருக்கு அனுப்பியிருந்தேன். அதனைப் பார்த்து உள்ளம் பூரிக்க தனது நன்றியைச் சொன்னார். அவுஸ்திரேலியா தேசிய வானொலி SBS தமிழ் ஒலிபரப்பில் அவரது விரிவான நேர்காணல் இடம்பெற வேண்டும் என்று அந்த வானொலி ஊடகவியலாளர் ரெய்சலிடம் நான் கேட்டுக் கொண்ட போது அவர் அதற்கு ஏற்பாடு செய்து தந்தார். மெல்பன் ஒலிப்பதிவு கூடத்திலிருந்து சிவத்தம்பியை தொலைபேசி ஊடாக பேட்டி கண்டேன். இரண்டு வாரங்கள் அந்த நேர்காணல் SBS தமிழ் ஒலிபரப்பில் ஒலித்தது.

அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் அதனை செவிமடுத்த பேராசிரியரின் பல மாணவர்கள் அவருக்கு தொலைபேசி ஊடாக வாழ்த்துத்தெரிவித்தனர் என்ற தகவலை பின்னர் எனக்குச் சொல்லி அகம் மகிழ்ந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)



**லெ.முருகபூபதி...**
*(அவுஸ்திரேலியா)*

# ஆசிரியர் சேவையில் நாற்பது வருடங்களை பூர்த்தி செய்யும் திருமதி சாந்தி விஸ்வநாதன்

கண்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாந்தி விஸ்வநாதன் தனது முதன்மைநிலைக் கல்வியை கண்டி அசோகா வித்தியாலயத்திலும், அதன் பின்னர் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கற்றார். 1981ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்டார். 1982 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் ஆசிரியர் நியமனத்திற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, மத்திய மாகாணத்தில் புசல்லாவை சி.சி தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

அங்கு மூன்று ஆண்டுகள் கடமையாற்றியதன் பின்னர் இடமாற்றம் பெற்று 1985ஆம் ஆண்டிலிருந்து கண்டி ரஜவலை தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். 1986 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பக் கல்வித்துறையில் பயிற்சியை நிறைவு செய்ததன் பின்னர், 1988 ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக நியமிக்கப்பட்டார்.

கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் இவரது வழிகாட்டலின் கீழ் பல மாணவர்கள் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி விருதுகளை பெற்றுள்ளார்கள். இவரின் கற்பித்தலின் மூலம் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 22 பேர் சித்தியடைந்து, நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தை கம்பளை கோட்டத்தில் முதலிடத்தையும் கண்டி மாவட்ட தமிழ் பாடசாலைகளில் மூன்றாம் இடத்தையும் அடையச் செய்த பெருமையும் இவரைச் சேரும்.

அதுமட்டுமன்றி இம்மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் செல்வன் அசோக் ராஜகோபாலன் ஜப்பான் நாட்டிற்கு செல்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார். அந்த வகையில் முதலாவது மலையக மாணவனை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்த சிறப்பும் இவருக்குரியதாகும்.

இவர் திருமணத்தின் பின்னர் மேல் மாகாணத்தில் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் இனங்கண்டு தமிழ்த் தினப் போட்டிகள் போன்ற பல்வேறு போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபெறச் செய்து பரிசில்களை வென்றெடுக்கச் செய்தார். புலமைப்பரிசில் பரீட்சையிலும் வலய மற்றும் மாகாண மட்டத்தில் பல மாணவர்களை முதலிடம் பெறுவதற்கும் வழிகாட்டியுள்ளார். இணைப்புப்பாடமாக சிங்களப் பாடத்தை இடைநிலை மாணவர்களுக்கு கற்பித்து அவர்களையும் அப்பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி அடையச் செய்தார்.



2002 ஆம் ஆண்டில் கல்விமாணிப் பட்டத்தை பெற்றார். மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் நியமனத்திற்கான போட்டி பரீட்சையிலும் சித்தியடைந்து 2004ஆம் ஆண்டு கொழும்பு வலயத்தில் ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்றார். மேல்மாகாண கல்வித் திணைக்களத்தால் நிகழ்நிலை மூலமாக பயிற்சிகளை வழங்கிய செயற்திட்டத்தில் சிறந்ததோர் வளவாளராக பங்குபற்றினார்.

மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற 'தரம் 5 புலமைப்பரிசில் இலக்கு தவறாதிருக்க கரம் கொடுத்தல்' எனும் புத்தகத்தில் உள்ளடக்க வேண்டிய விடயங்களை மொழி பெயர்த்தும், செயலட்டைகள், வினாத்தாள்களை தயாரித்தும் பங்காற்றி வருகின்றார்.

உதவிப்பரீட்சகர், கட்டுப்பாட்டு விடைத்தாள் புள்ளியிடல் குழு உறுப்பினர், பிரதம பரீட்சகர் என பல பதவிகளையும் ஏற்று செயற்பட்டு வருகிறார். திருமதி சாந்தி விஸ்வநாதன் ஆசிரியை கல்விச் சேவையில் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்வதையிட்டு பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**கே.சுப்பிரமணியம்...**
*முன்னாள் அதிபர்*
*க/கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்*

# உலகின் உயர்மட்ட திரைப்படங்கள்; விமர்சகர் ஒருவரின் மனப்பதிவுகள்

கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரம். டிசெம்பர் 12.16.2016. அந்த 8 நாட்கள், தள்ளாத வயதில் மார்புச்சளியுடன் ஜனசமுத்திரத்திடையே உயர்மட்ட உலகத் திரைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்த விமர்சகர் ஒருவரின் மனப்பதிவுகள்.



நம்மட, பறையாதே, மாறு, பொயிட்டு வரட்டே, அவளின்ர, மோளே, என்ர குட்டியல்லே... இது போன்ற வார்த்தைகள் இலங்கையிலும், இந்திய மாநிலங்களில் ஆய்வறிவு கொண்ட மலையாள மொழி பேசும் தென்பகுதிக் கேரளத்திலும் உச்சரிக்கப்படும் பொழுது,இலங்கைத் தமிழரின் பேச்சுத் தமிழ் இனிமையைக் கண்டு பரவசமானேன்.

அது மட்டுமா? பால் அப்பம், பிட்டு, இடியப்பம், கறி, சோறு, பால் கோப்பி இவை எல்லாம் இலங்கையில் மலையாள மக்களின் செல்வாக்கை வெளிப்படுத்தும். இன்னும் பல. அதுவல்ல, இங்கு எனது நோக்கம்.

திருவனந்தபுரம் ஒரு பெரிய பட்டணமும், பட்டினமுமாகும். தெற்கில் நாகர்கோவில் ஊடாக கன்னியாகுமரி மாவட்டம் ஈறாகவும், தமிழகத்தின் திருநெல்வேலி முதலாமிடங்களில் கொஞ்சு தமிழ் பேசப்படும் வண்ணமும் இனிமை சொரிகிறது.


கேரள அரசின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக ஆண்டுதோறும் அனைத்துலகத் திரைப்பட விழாவை, அங்குள்ள கேரள மாநிலத்தின் சலனச்சித்திர அகெடமி ஒழுங்கு செய்து வருகிறது. 21ஆவது விழாவில் பின்வரும் படங்கள் இடம்பெற்றன.

உலகின் 65 நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 185 படங்கள் திரையரங்குகளில் தினமும் மூன்று நான்கு தடவை காட்டப்பட்டன. மாநகரத்திலுள்ள திரையரங்குகளின் பெயர்கள் தங்கள் தகவலுக்காக: கலாபவன், கைரளி, ஸ்ரீ நிலா, தன்யா, ரெம்யா, நியூ தியேட்டர் ஸ்கிறீன், 1,2,3, தாகூர், ஸ்ரீ பத்மநாபா, அஜந்தா, நிஸாந்தி, ஏரிஸ் பிளெக்ஸ்.

இந்தத் திரைப்பட விழாவிலே அடங்கியிருந்தவை அனைத்துலகப் போட்டிப் படங்கள், இன்றைய மலையாள சினமா, இந்திய சினமா, பால் சார்ந்த படங்கள், புலம்பெயர்ந்தவர்களின் படங்கள், பிரிட்டிஷ் நெறியாளர் கென்லோச்சி படங்களின் மீள்பார்வை, திரையுலகக் கலைஞர்களின் வாழ்க்கைச் சித்திரங்கள், அதியுன்னத பழைய படங்கள் ஆகியனவாகும்.

மேலும் உடன்நிகழ்கால (Contemporary) திரைப்பட நெறியாளர் மா ஹன்ஸன் லவ் படம், பழைய கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக அவர் தம் படங்களின் மீள்பார்வை, ஜூரியினர் தேர்ந்தெடுத்த படங்கள், செக்கஸ்லோவாக்கியா, ஸ்லோவாக்கியா நாடுகளின் முன்னைய சிறப்புப் படங்கள், மலையாள நெறியாளர் கே.எஸ். சேதுமாதவனின் படங்கள் என்ற வகைகளுக்குள் சலன சிந்திரங்கள் காட்டப்பட்டன.

## எழுதுவது கே.எஸ்.சிவகுமாரன்



திரைப்படத்துறையை ஆராயும் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் இந்த விழா அரிய சந்தர்ப்பத்தை அளித்தது. பொதுவாக கேரள மக்களுள் பலர் இடதுசாரித் சிந்தனையுடையவர்கள். ஆதலால், அத்தகைய படங்களின் காட்சிகளே மேலோங்கி நின்றன.

இந்தத் திரைப்பட விழாவிற்கும் கோவாவில் நடைபெறும் அனைத்துலகத் திரைப்பட விழாவிற்கும் இந்திய ஏனைய அனைத்துலகத் திரைப்பட விழாக்களுக்கும் 1990 முதல் தவறாது நான் போய் வருவது வழக்கம். கடந்த சில வருடங்களாக உடல்நலம் குன்றியது காரணமாக நான் போய் வருவதில்லை.

இந்த ஆண்டிலாவது (2016) போய் வரலாம் என்று தீர்மானித்து மூன்று நாள் கழித்து, டிசெம்பர் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை ஒரு சில படங்களைப் பார்த்தேன்.

11ஆம் திகதி எனது புத்தகம் ஒன்று மணிமேகலை பிரசுரத்தினால் கொழும்பில் அறிமுகம் செய்யப்பட்டு இருந்தது. அதனால்தான் 12ஆம் திகதி அங்கு போக நேர்ந்தது. போன வேளையில் கபம், மார்புச் சளி, இருமல், தொண்டைப் புண் ஆகியன தொந்தரவு தந்தன. 12ஆம் திகதி முழுநாளும் தியேட்டர் அனுமதிச் சீட்டுக்காக காத்திருக்க வேண்டியிருந்தது.

இடையில் மருத்துவமனையில் 4 மணித்தியாலங்கள் பரிசோதனைக்கு உட்பட்டு, இன்ஜெக்ஸன், இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தம், நீராவி சுவாசித்தல், மருந்து வகைகள் ஆகியன தரப்பட்டு, சிறிது சுகமானேன்.

(தொடரும்)

# வன்முறை ஊடாக தீர்வினை பெறமுடியாது

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**யாழ்.விசேட நிருபர்**

எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வினை காண்போம். எத்தகைய பிரச்சினைகளையும் வன்முறைகளுக்கூடாக தீர்க்க முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உங்களின் உணர்வுகளையும் அதில் இருக்கின்ற நியாயங்களையும் நாங்கள் புரிந்து கொள்ளுகின்றோம். அதற்கு மதிப்பளிக்கின்றோம்.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் களையப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

ஆனால் எத்தகைய பிரச்சினைகளையும் வன்முறைகளுக்கூடாக தீர்க்க முடியாது என்பதை நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றவர்கள் நாம்.

இதன்காரணமாக புலிகள் எம்மில் பலரை கொலை செய்திருக்கின்றார்கள். என்னை கொலை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். எனினும் தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தினையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து வந்துள்ளோம்.

அதனடிப்படையிலேயே எமது அரசியல் செயற்பாடுகளும், தென்னிலங்கை மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனான எமது உறவும் இருந்து வருகின்றது.

இந்த அணுகுமுறையினையே உங்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வன்முறைகள் ஊடாக எமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

எனவே, எமக்கிடையில் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால், கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வினை காண்போம். எமது எதிர்காலத்தினையும் எமது தாய்நாட்டினையும் பாதுகாப்போம் என அவர் தெரிவித்தார்.

# மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளியமையால் தாயார் மரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட் மீசாலை வடக்கு பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளியமையால் தாயார் உயிரிழந்துள்ளார்.

கடந்த 08/05/2022 அன்று வீட்டுப் படியால் ஏறிய தாயை மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தள்ளியதில் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார். இந்நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த தாயார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 62 வயதான தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

**மன்னார் குறூப் நிருபர்**

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இவ்விடயங்களில் தமிழ் மக்களின் பங்களிப்பு இருக்கின்ற போது அவை திசை திருப்பப்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் வைத்து நேற்று (11) அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்து வருகின்றது. போராட்ட வடிவில் பல விடயங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. மஹிந்த ராஜபக்சவின் ஆரம்ப பிரச்சினையே இன்று பாரியளவில் வெடித்துள்ளது. பொருளாதார பிரச்சினை பின்தங்கிய நிலையிலே இவ்வாறான ஒரு சூழலை உருவாக்கி மஹிந்த ராஜபக்ச,ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச மற்றும் அவருடைய அரசாங்கம் மிக மோசமான ஒரு சூழலை உருவாக்கியுள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இவ்விடயங்களில் தமிழ் மக்களின் பங்களிப்பு இருக்கின்ற போது அவை திசை திருப்பப்படலாம்

இதனை நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

காலச்சக்கரம் சுழன்று கொண்டு இருப்பதை பார்க்கின்ற போது இந்த மே மாதத்தில் தான் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தார்கள்.



உயிர் அவலம் ஏற்பட்டது. மே18 இல் எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட முடியாத நிலையில் அநாதையாக கைவிடப்பட்டது. தனது தந்தை உயிரிழந்து சடலமாக கிடக்கும் போது அதனை தாண்டி வருகின்ற அவலமான சூழ்நிலை ஏற்பட்டது.

மே மாதம் என்பது எமது மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றது. எங்களுடைய மக்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு இந்த மே மாதத்திலேயே நிலமைகள் மாறி இருப்பது கவலை தருகின்ற விடயமாக இருந்தாலும், இறைவன் ஒரு நியாயமான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளதாக நாங்கள் கருத முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

எனவே தமிழர்களாகிய நாங்கள் முழுமையாக போராட்டங்களில் இணைந்து கொண்டிருந்தோம் என்றால் எமது பக்கம் திசை திருப்பி எங்களுக்கு எதிராக ஒரு வன்முறையை தூண்டி விடுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றது.

ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் நாடு முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அன்றாடம் உழைத்து உண்ணுகின்ற மக்கள் தற்போதைய சூழலில் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெறுமனே பதாதைகளை எரித்து வீர வரலாறை கொச்சைப்படுத்தாதீர்கள்

## யாழில் அமைதியை குழப்ப சில தீய சக்திகள் முயற்சி

**யாழ். விசேட நிருபர்**

வெறுமனே பதாதைகளை எரித்து எம் வீர வரலாறை கொச்சைப்படுத்தாதீர்கள் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பு அலுவலக வாயிலில் இருந்த பாராளுமன்ற உறுப்பினரின் பதாகைக்கு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இரவு இனம்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டது. அதனால் பதாகை சிறு சேதங்களுக்குள்ளானது.

இச்சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழிலும் கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றனர். தமது அரசியல் தேவைக்காக உசுப்பேற்றுபவர்கள் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருங்கள்.

இங்கு வன்முறைகள் இடம்பெற்றால் பாதிக்கப்படுவது எங்கள் மக்களே. நிதானித்து சிந்தித்து செயற்படுங்கள்.



யாழில் எனது அலுவலகம் எரிக்கப்பட்டது என பரவும் தகவல்கள் தவறானவை என்பதோடு, அலுவலக பதாதையிலும் சிறு பகுதி மாத்திரமே வன்முறையை தூண்டும் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இச்செயலூடாக யாழில் வன்முறையை தூண்டி குளிர்காய நினைப்பவர்கள் தமது அரசியல் கோழைத்தனத்தை கைவிட வேண்டும்.

வரலாறு சொல்லும் தமிழர் வீரங்கள் இந்த கோழைத்தனத்தை ஏற்றுக்கொள்ளாது.

நாட்டில் அமைதிவழி போராட்டங்களில் ஈடுபட்ட மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறைகளை நாம் கண்டித்துள்ளோம். எம்மீது தாக்குதல் நடாத்தி தமது அரசியல் சிறுபிள்ளைத்தனத்தை ஒரு தரப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இருப்பினும் இதனை காட்டிக்கொடுத்து எங்கள் இளைஞர்களை நாம் எப்போதும் நெருக்கடிக்குள் சிக்கவைக்க மாட்டோம். ஆனால் கீழ்த்தரமான அரசியல் வலைக்குள் சிக்கிக் கொள்ள வேண்டாம் என யாழ் மாவட்ட மக்களை முதலில் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தில், பொதுஜன பெரமுன அல்லாத உறுப்பினரும், அவர்களின் சின்னத்தில் போட்டியிடாத உறுப்பினருமான நான் எனது மக்களுக்கான அபிவிருத்திகளை வென்றெடுப்பதில் எத்தனையோ தடைகளை எதிர்கொண்டேன். அவற்றையெல்லாம் பொறுமையோடும், நேர்மையோடும் கையாண்டு கடந்த காலங்களில் மக்கள் சேவையாற்றியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

# உழவு இயந்திரத்துடன் மோதி ஒருவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகர் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை கழிவகற்றும் உழவியந்திரத்துடன் மோதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். துவிச்சக்கரவண்டியில் சென்றவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். சாவகச்சேரி உதயசூரியன் பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உழவு இயந்திரத்துடன் மோதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் ரவி ராஜபக்ஷவின் தலைமையில் 110 மாணவர்களுக்கான பாதணிகளும் எட்டு ஆசிரியர்களுக்கு பண வவுச்சர்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட மன்.சிறுத்தோப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் 110 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டதுடன் எட்டு ஆசிரியர்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்களும் வழங்கப்பட்டன.

(படம்: தலைமன்னார் விஷேட நிருபர்)

# காதர் மஸ்தான் எம்.பிக்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு





**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் ஆகியோரது வீடுகளுக்கு இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் ,அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் மேற்கொண்டவர்கள் மீது கொழும்பில் மேற்கொண்ட தாக்குதலையடுத்து நாடு பூராகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும், அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் வன்முறைகள் ஏற்பட்டதுடன், பலரது வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள் இரவிரவாக தீயிட்டு எரிக்கப்பட்டன.

இதனையடுத்து வவுனியாவில் வசித்து வரும் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த முன்னாள் கிராமிய அபிவிருத்தி மற்றும் பயிர்செய்கை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் ஈ.பி.டிபியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் ஆகிய இருவரதும் வீடுகள் மற்றும் அவர்களது அலுவலகங்கள் என்பவற்றுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக, இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 561 ஆவது படைப் பிரிவினர் இருவரதும் வீடுகள் மற்றும் அலுவலங்களுக்கான பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# தங்கச் சங்கிலி அபகரிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாளையடி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று காலை வீதியால் நடந்து கடைக்கு சென்ற பெண்ணொருவரின் ஒன்றரைப் பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். அத்துடன் அப்பெண்ணின் கைப் பையினையும் பறித்துக்கொண்டு சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நபர்

## மனைவி மீது சந்தேகம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று புதன்கிழமை (11) கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தோண்டப்பட்ட பகுதியிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

முள்ளியான், வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த தாசன் சிவஞானம் (வயது 42) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டு வீட்டுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் புதைக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (09) அன்று அவர் கொலை செய்யப்பட்டு அருகிலுள்ள காணியில் புதைக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை(10) மாலை அப்பகுதிக்கு சென்று புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் இடத்தை அடையாளப்படுத்தியுள்ளனர். அதனைதொடர்ந்து நேற்று புதன்கிழமை(11) கிளிநொச்சி நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் இஸ்மயில் ஜெமில், சட்டவைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார் முன்னிலையில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது முற்பகல் 10.00 மணியளவில் அப்பகுதி தோண்டப்பட்ட போது கால்கள் கட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் மனைவி சந்தேகநபராக இனம்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கிழக்கின் குரல்



மருதமுனை கடற்கரையில்

## குளித்துக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் மாயம்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை (10) நண்பர்கள் இருவருடன் சேர்ந்து 4 இளைஞர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில் இரு இளைஞர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக சம்பவத்தை நேரடியாக பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

கடல் அலையில் இவர்கள் சிக்குண்ட காட்சியை கையடக்க தொலைபேசியில் பதிவு செய்திருந்தனர்.

இதனை அடுத்து பொதுமக்கள் குறித்த இளைஞர்களை காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இரு இளைஞர்களையும் காப்பாற்ற முடியவில்லை. கடல் நீரில் குளித்த மற்ற இரு இளைஞர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று (11)காலை குறித்த பகுதிக்கு கடற்படையினர் வருகைதந்து தேடுதல் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

எனினும் இதுவரை காணாமல் போன இளைஞர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த கடற்கரைப் பகுதியில் அதிகளவிலான பொதுமக்கள் ஒன்று கூடியுள்ளனர். தற்போது மருதமுனை பிரதேசம் சோகத்தில் ஆழ்ந்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு காணாமல் போயுள்ள, பயறூஸ் யஸீத், உபைதுல்லாஹ் அதீப் என்ற இரு இளைஞர்களும் உயர்தரப் பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் 17 வயது நிரம்பிய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலத்துக்கு வந்த கடல் நீர் அக்கரைப்பற்றில் பதற்றம்

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று கடற்கரைப் பகுதியினை அண்டிய மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் நேற்று(11) அதிகாலை வேளை கடல் நீர் புகுந்தமையால் மக்கள் மத்தியில் சுனாமி அச்சம் ஏற்பட்டதுடன் அப்பகுதியில் பதற்ற நிலையும் ஏற்பட்டது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று மீராநகர்ப் பிரதேசத்தில் வழமைக்கு மாறாக கடல் அலைகளின் தாக்கம் அதிகரித்து கடல் நீர் கடற்கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள நிலப்பகுதிக்குள்ளும் மக்கள் குடியிருப்புப் பிரதேசத்திற்குள்ளும் புகுந்தமையால் அப்பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டு இந்நிலைமையினைப் பார்வையிட பெருந் தொகையான பொதுமக்கள் அப்பிரதேசத்தினை நோக்கிப் படையெடுத்தனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நிகழ்ந்ததாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சுனாமி வதந்தி மக்கள் மத்தியில் கிழப்பப்பட்டு அக்கரைப்பற்று பிரதேச மக்கள் மத்தியில் பீதியுடனான நிலை தோன்றியதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

கடல் நீர்; கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பிரதான காபட் வீதியினையும் தாண்டி நிலப்பரப்பில் புகுந்தமையினால் கடற்கரையில் தரித்து வைக்கப்பட்ட படகுகள், சிறியரக வள்ளங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்றன கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்பகுதியில் இருந்து இவ்வாறு அலைகள் நிலப்பகுதிக்கு உட்புகுந்தமையால் கடலில் இருந்து பல்வேறு கடற் தாவரங்களும் குப்பை கூளங்களும் நிலத்தினை நோக்கி அள்ளுண்டு கரையோரமெங்கும் சிதறிக் காணப்படுகின்றன.

## மட்டு. மாவட்ட அரச ஆதரவு அரசியல்வாதிகளின் சொத்துகளுக்கு பாதுகாப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் உட்பட அரச ஆதரவு அரசியல்வாதிகளின் இல்லங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மன்றேசா, வீதியில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோரின் இல்லங்கள் மற்றும் அலுவலகங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆதரவு அரசியல்வாதிகளின் அலுவலகங்கள் இல்லங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊரடங்கு சட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நகர் உட்பட பல பகுதிகளில் காவல்துறையினர் வீதி சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன் மாவட்டம் முற்றாக செயலிழந்த நிலையில் காணப்பட்டது.



ஊரடங்கு சட்டம் காரணமாக கல்முனை நகரக்கடை, இஸ்லாமாபாத் பிரதேச வீதிகளில் திண்மக்கழிவு அகற்றப்படாத நிலை காணப்படுவதை படத்தில் காணலாம்.
படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

## காரைதீவில் கடல் கொந்தளிப்பு: மீனவர் தொழில் பாதிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவில் திடிரென நேற்று முன்தினம் (10) மாலை கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதனால் கடல்நீர் பெருக்கெடுத்து கரையிலிருந்த தோணிகளை சேதப்படுத்தியுள்ளது. மீனவர்கள் உசாராக செயற்பட்டு தோணிகளை நீண்டதூரம் கரைக்கு கொண்டு வந்து வைத்துள்ளனர். கடல்நீரும் பெருக்கெடுத்ததால் கரையிலிருந்த பள்ளத்திற்குள் நீர்நிறைந்தது. அதற்குள் தோணிகளை ஓட்டி சிறுவர்கள் மக்கள் குதூகலித்தனர்.

இதேவேளை கடற்கொந்தளிப்பால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. ஆழ்கடல் மீன்பிடியோ கரைவலை மீன்பிடியோ எதுவுமே இடம்பெறவில்லை. அதனால் நேற்று (11) மீனுக்கு தட்டுப்பாடு நிலவியது.

## மட்டக்களப்பில் வீதி சோதனை சாவடிகள்



**கல்லடி குறூப் நிருபர்**

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் இன்று (12) காலை 7.00 மணிவரை அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் மட்டக்களப்பில் வழமைக்கு மாறாக போக்குவரத்து செய்வோர் குறைவாக காணப்படுவதுடன், நகரப் பகுதி முற்றாக வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இருந்த போதிலும் ஒரு சில இடங்களில் பொலிஸார் வாகனங்களை நிறுத்தி சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், தேவையற்ற முறையில் பயணிப்பவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கையினையும் முன்னெடுத்து வருகின்றனர். அத்தியாவசிய சேவை நிலையங்களில் கடமைக்கு செல்வோரையும், வைத்தியசாலை உள்ளிட்ட, அவசர தேவைகளுக்காகப் பயணிப்போரை மாத்திரம் வீதிகளால் பயணிப்பதற்கு பொலிஸார் அனுமதிக்கின்றனர்.

மட்டக்களப்பு நகர் பகுதிக்குள் பிரவேசிக்கும் எல்லைப் பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதையும் காண முடிகின்றது.

## பொடியப்பு பியசேனவின் வீட்டிற்கு முன்னால் டயர் எரிப்பு



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அக்கரைப்பற்றில் முன்னாள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேனவின் வீட்டுக்கு முன்னால் டயர் எரிப்பு சம்பவம் கடந்த திங்கட்கிழமை (9) இரவு இடம்பெற்றது.

அக்கரைப்பற்று சாகாம வீதியிலுள்ள முன்னாள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளருமான பொடியப்பு பியசேனவின் வீட்டிற்கு முன்னால் சம்பவதினமான திங்கள் இரவு ஒன்று திரண்ட இளைஞர்கள் வீதியில் டயர்களை போட்டு தீயிட்டதையடுத்து அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அக்கரைப்பற்று பொலிஸார் தீயை அணைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததுடன் அங்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

## சமாதானத்தை பேணி, மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்

சமாதான நீதவான்கள் பேரவை

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

நாட்டில் சமாதானத்தினைப் பேணி நீதியினை நிலை நிறுத்து மாறும் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் எனவும் சமாதான நீதவான்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

சமாதான நீதவான்கள் பேரவையின் தேசிய பணிப்பாளர் கலாநிதி பஹத் ஏ மஜீத் இக்கோரிக்கையினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளார்.

அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நேற்று(11) இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலை குறித்து, சமாதான நீதவான்கள் பேரவையின் நிருவாகிகள் மூலமாக இவ்வூடகவியலாளர் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது சமாதான நீதவான்கள் பேரவையின் தேசிய பணிப்பாளர் கலாநிதி பஹத் ஏ மஜீத் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி மிக விரைவில் சரி செய்து மக்களுக்கு சுமையற்ற நிலையான சூழல் ஏற்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொருளாதாரச் சுமை மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதனை தாங்கிக்கொள்ள இயலாமல் மக்கள் ஜனநாயக ரீதியில் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்துகின்றபோது அம்மக்களுக்கு வழிவிட்டு அவர்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் ஆட்சியாளர்கள் முனைய வேண்டும்.

தற்கால சூழ்நிலையில் நம் நாட்டில் மனித உரிமையும் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டிய கால கட்டமொன்றில் நாமிருக்கின்றோம்.

சாத்வீகமான முறையில் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை களங்கப்படுத்தாது, அம்மக்களை சீண்டிப்பார்க்காது இருக்க வேண்டும்.

மக்கள் ஜனநாயக வழியில் நடத்தும் போராட்டங்களையும் அவர்களின் எதிப்பு நடவடிக்கைகளையும் மலினப்படுத்தாது அவர்களுக்கான பாதுகாப்பினை, பாதுகாப்புத் தரப்பினரால் வழங்குவதற்கான முற்று முழுதான நடவடிக்கைகளையும் ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## அசாதாரண சூழ்நிலையால் வெள்ளரிப்பழ செய்கையாளர்கள் பாதிப்பு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கோடைகால தாகம் தணிக்கும் பழமான வெள்ளரிப்பழச் செய்கையில் ஈடுபட்டு வரும் தோட்டச் செய்கையாளர்கள் கடந்த மூன்று தினங்களாக நாட்டில் ஏற்பட்டுவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பெரும் நட்டங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது கிழக்கில் கடும் வெப்பம் நிலவிவரும் நிலையில் இங்குள்ள பிரதான வீதிகளின் ஓரங்களில் தாகம் தீர்க்கும் கோடைகாலப் பழமான வெள்ளரிப்பழம் அமோக விற்பனை செய்யப்பட்டுவந்தன. இங்குள்ள விவசாயிகளும் வெயில் காலத்தை நம்பியே வெள்ளரிப்பழச் செய்கையினையும் செய்து வருகின்றனர். தினமும் தோட்டத்தில் வெள்ளரிப்பழங்கள் பழுத்து வருவதினால் அவற்றை உடனே பறித்து வியாபாரிகளுக்கு கொடுத்து விற்பனை செய்துவந்தனர். இந்நிலையில் தற்போது கடந்த மூன்று தினங்களாக நாட்டில் நிலவிய அரசியல் அசாதாரண நிலமை காரணமாக பயிரிடப்பட்ட வெள்ளரிப்பழங்கள் அனைத்தும் தோட்டங்களில் வெடித்துச் சிதறி, அழுகிய நிலையில் கிடக்கின்றன. இதனால் வெள்ளரிப்பழச் செய்கையாளர்கள் பெரும் நட்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.




ஏறாவூரில் அமையபெற்றிருக்கும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்கு கொழும்பு மிட் டவுன் (Colombo Mid Town ) ரோட்டரிக் கழகத்தினால் அண்மையில் (7) ஒட்சிசன் செறிவாக்கி இயந்திரமொன்று அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்ட போது...
படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்

## முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நசீரின் வீடு, அலுவலகம், ஹோட்டல் தீக்கிரை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஏறாவூரிலுள்ள முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட்டின் காரியாலயம், வீடு மற்றும் அவரது தம்பியின் ஹோட்டல் என்பன உடைக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (10) செவ்வாய்க்கிழமையன்று மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவரது ஏறாவூரிலுள்ள அலுவலகத்துக்கு முன்னால் போடப்படிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்த பதாகைகள் உடைக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட்டின் காரியாலயம், வீடு மற்றும் அவரது தம்பியின் ஹோட்டல் என்பன உடைக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

இதன் போது இங்கு பதற்ற நிலைமை காணப்பட்டது. இதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## வன்முறைகளுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

நிலைநாட்டுவதற்கும் அதிகாரிகள் தரப்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது. இது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் 4 யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1) அலரி மாளிகையிலிருந்து வன்முறைக் கூட்டத்தை கட்டவிழ்த்துவிடுவதற்குத் தூண்டிய, சதி செய்த அனைவரையும் அரசாங்கத்தில் அவர்கள் வகித்த பதவிகள் மற்றும் அவர்களின் குடும்ப தொடர்புகளை கருத்திற்கொள்ளாமல் உடனடியாக கைது செய்ய வேண்டும். அத்தகைய நபர்களுக்கு எதிராக உடனடி பயணத் தடைகளை பொலிஸார் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2) அலரி மாளிகைக்கு எதிரிலும் காலிமுகத்திடலிலும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.
3) ஆட்கள், தனிநபர்கள், அரச சொத்துகளுக்கு எதிரான வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டு குற்றம்புரிந்தவர்களும் விசாரிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4) அலரி மாளிகையிலிருந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் உட்பட வன்முறைக் கூட்டத்தை தடுக்கத் தவறியமை தொடர்பில் இலங்கை பொலிஸார் உட்பட அதிகாரிகளுக்கு எதிராக சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும்.

## வன்முறைகளை கைவிட்டு... 03ஆம் பக்கத் தொடர்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற சபை முதல்வருமான தினேஷ் குணவர்தனவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் சபாநாயகரிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நாட்டில் இடம்பெற்ற குழப்பகரமான சூழ்நிலை காரணமாக நேற்றுவரை 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் 234 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களின் 86 பேர் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களில் மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் மேற்படி வன்முறைச் சம்பவங்களில் 136 வீடுகள் தாக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளதுடன் 41 வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளன. மேலும் 61 வாகனங்கள் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நேற்றைய தினம் குறிப்பிடத்தக்க வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதுடன் நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை இன்று காலை 6.00 மணிக்கு தளர்த்த முடியும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. வன்முறைகள் அதிகரிக்குமானால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு தேவைப்பட்டால் இன்றைய தினம் தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டத்தை மேலும் சில தினங்களுக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தவும் முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

அதேவேளை நாட்டில் சட்டம், ஒழுங்கு உரிய விதத்தில் செயற்படுத்தப் படாவிட்டால் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள முடியாது போகும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நாட்டின் நிலைமையை கவனத்திற்கொண்டு மிக விரைவாக நிலையான ஆட்சி முறைமை மற்றும் நிலையான அரசாங்கத்தை உருவாக்குவது அவசியம் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதே வேளை, வன்முறைகளைக் கைவிட்டு அமைதி காக்குமாறு கல்விமான்கள் நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் வன்முறையானது அமைதியான போராட்டத்திற்கு பாதிப்பையே ஏற்படுத்தும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றால் நாட்டில் மருந்து தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும் என்றும் மருத்துவத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## GCE (O/L) பரீட்சைகள்...

தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, எதிர்வரும் 23 ஆம் திகதி முதல், ஜூன் மாதம் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இந்த நிலையில், பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் தகவல்கள் பரப்படுகின்றன.

அந்த தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## முள்ளிவாய்க்காலில் கண்காணிப்பு தீவிரம்...

அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் 13வது வருட நினைவேந்தல் எதிர்வரும் 18ம் திகதி வடக்கு கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களின் வீடுகளுக்குச் சென்றும் அவர்களை வீதிகளில் வைத்து மறித்தும் இராணுவப் புலனாய்வுத் துறையினர் 'முள்ளிவாய்க்காலுக்கு என்ன செய்யப்போகிறீர்கள்' என விசாரிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

## 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்...

அதனடிப்படையில் களுத்துறை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில், மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சகோதரத்துவத்தின் பிரகாரம்...

கலந்துரையாடப்பட்டதோடு, இந்தப்பேரழிவு தருணத்தில் இலங்கைக்கு சகோதரத்துவத்தின் பிரகாரம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சீனத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

வெளிப்படைத்தன்மையுடன் நாட்டை ஆட்சி செய்தல்,இலஞ்சம்,ஊழல் மற்றும் அடக்குமுறைகள் ஒழிப்பு என்பனவே தனது நிர்வாகத்தில் முதன்மையான அம்சமாக இருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார். இலங்கையை தற்போதைய நிலையில் இருந்து மீட்கும் முகமாக சீனாவின் பெருந்தன்மையான ஆதரவு மிகவும் அவசியமானது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது தொடர்பில் தலையிடுமாறும் தூதுவரிடம் அவர் கோரிக்கையும் விடுத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் கலந்து கொண்டார்.

## துப்பாக்கி சூட்டு உத்தரவு...

பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொது சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் நலின் ஹேரத் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக தனது டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்த எம்.ஏ. சுமந்திரன், அரசியலமைப்பின் 52(3) பிரிவின்படி அமைச்சரவை கலைக்கப்படும் போது அனைத்து அமைச்சின் செயலாளர்களும் பதவி வகிப்பதை நிறுத்துவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்களின் உரிமைகளுக்காக... (05ம் பக்கத் தொடர்)

சிவத்தம்பி அவர்கள் நீண்ட காலமாக பல்வேறு உடல் உபாதைகளுடன் போராடினாலும் அவரது சிந்தனைகள் மிகவும் கூர்மையுடன் பதிவாகிக் கொண்டிருந்தன. அந்திம காலத்தில் கண்பார்வை குறைந்த போதிலும் எதுவித தடுமாற்றங்களும் இன்றி தனது கருத்துகளை தெளிவாகச் சொல்லி மற்றவர்களைக் கொண்டு எழுத்தில் பதிய வைத்தார். அந்த வகையில் அவரது சுறுசுறுப்பான இயக்கம் அனைவருக்கும் முன்னுதாரணமானது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியை குறிப்பாகவும் தமிழ் இலக்கியத்தை பொதுவாகவும் நோக்குமிடத்து பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கும் பணியும் விரிவானது, ஆழமானது. அவரது வாழ்வும் பணிகளும் தமிழர் நலன் சார்ந்தே விளங்கின. அவர் விமர்சனங்களுக்கும் ஆளானார். அதற்காக அவர் தமிழ் ஆய்வுத்துறைக்காக மேற்கொண்ட கடின உழைப்பை குறைத்து மதிப்பிட முடியாது. அவரது வாழ்வு இலங்கையில் வடமராட்சியில் கரவெட்டியில் தொடங்கி, சர்வதேசரீதியாக வியாபித்து வளர்ந்து படர்ந்திருந்தது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்களால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் நிரப்பப்பட முடியாதது.

## நாட்டில் சுமுக நிலைமையை... 03ஆம் பக்கத் தொடர்

கேட்போர் கூடத்தில் நேற்று (11) இடம்பெற்றது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன ஆகியோரும் கலந்துகொண்ட இந்த செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் மேலும் உரையாற்றுகையில் :

கடந்த 9ஆம் திகதி முதல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 136 சொத்துக்கள் (வீடுகள்), 61 வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன (அரச வாகனங்கள் உள்ளடங்களாக), 41 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன,இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் 219 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மிகவும் மோசமாக தாக்கப்பட்டனர். அத்துடன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. எனவே, அந்த அனைத்து சம்பவங்கள் தொடர்பில் காணப்படும் வீடியோகாட்சிகள், சமூகவலையத்தள பதிவுகள் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

இதேவேளை,சிலர் திட்டமிட்ட அடிப்படையில் வன்முறைகளிலும் கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுப்பட்டுள்ளனர்.மேலும் சிலர் சட்டத்தை தமது கையில் எடுத்துள்ளனர். இந்நிலையிலேயே நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் பொருட்டு பொதுமக்கள் பாதுகாப்புசட்டத்தின் பிரகாரம் அவசரகால சட்டமும், ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டங்கள் விரும்பியோ விரும்பாமலோ கடுமையாக அமுல்படுத்தப்படும்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தவோ,தேவையற்ற முறையில் தாக்குதல் நடுத்தவோ பாதுகாப்புத் தரப்பினர் பலத்தை பயன்படுத்தவோ துப்பாக்கிச் சூட்டை மேற்கொள்ளவோ எந்தவொரு தேவையும் எமக்கு இல்லை. பொலிஸாருக்கு உதவியாகவே முப்படையினர் ஈடுப்படுத்தப்பட்டனர். சகல சந்தர்பங்களிலும் குறைந்த அளவு பலத்தையே பயன்படுத்தினர். என்றாலும் மிலேச்சனத்தனமான தாக்குதல்களை எமக்கு பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. எனவே இது தொடர்பில் ஜனாதிபதிக்கும். பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு பாரியபொறுப்பு உள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் பாதுகாப்புச் செயலாளர் என்ற அடிப்படையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அதிகாரத்திற்கு அமையவே சகல உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று இந்தியாவின் முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதி :

இந்தியா எமது சகோதர நாடு. எமக்குபொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பிற்கு தங்களால் முடியுமான ஒத்துழைப்பை வழங்கினார்கள். அதற்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். என்றாலும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைஉள்நாட்டுவிவகாரத்தைஎதிர் கொள்ள எமது முப்படையினரும் பொலிஸாரும் போதுமானவர்கள் அதற்குரிய பலம் எமது தரப்பிகருக்கு உள்ளது. இந்நிலையில் வெளிநாட்டு இராணுவத்தை அழைக்கவோ,வெளிநாட்டு இராணுவத்தின் தலையீடோ தேவையற்றது என்றனர்.

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக பரவலாக பேசப்படுகின்றது. அதன் உண்மைத் தன்மை என்ன என மற்றுமொரு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் :

நாட்டில் இராணுவஆட்சியை ஏற்படுத்தும் எந்ததேவையும் எமக்கு இல்லை, இந்தநாட்டில் இராணுவஆட்சிவாய்ப்பு இல்லை. இராணுவஆட்சியை ஏற்படுத்தும் நோக்கம் பாதுகாப்புச் செயலாளர் என்ற அடிப்படையில் எனக்கோ முப்படைத் தளபதிகளுக்கோ ஒருபோதும் கிடையாது. எமது நாட்டின் வரலாற்றில் 1960களில் இராணுவ ஆட்சிக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதுதோல்வியில் முடிந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. எனவே இராணுவஆட்சி ஒருபோதும் ஏற்படாது என்று பாதுகாப்புச் செயலாளர் திட்டவட்டமாக மறுத்தார்.

தற்போது நாட்டில் அமுலிலுள்ள ஊரடங்குச்சட்டம் தொடரப்படுமா என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் :

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகாலசட்டமும் பின்னர் ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டு அது நாளை 12ஆம் திகதி (இன்று) காலைவரை நீடிக்கப்பட்டுள்ளது. வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்படாதபட்சத்தில் நாட்டில் சுமுகமானநிலை தொடரும் பட்சத்தில் ஊரடங்கு சட்டம் சிறிது நேரம் தளர்த்தப்பட்டு சிலவேளை மீண்டும் அமுல்படுத்தப்படலாம் என்றும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

## வன்முறை நீடித்தால்... 03ஆம் பக்கத் தொடர்

ஏற்படக்கூடும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, எதிர்ப்பு நடவடிக்கைகளை அமைதியான முறையில் முன்னெடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் அறிக்கை ஒன்றின் மூலம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

இதேவேளை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தற்சமயம் முன்னெடுத்து வரும் பணி பகிஸ்கரிப்பை இன்று வரை நீடித்துள்ளதாக அதன் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் சுகாதார சேவையாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## தீர்வு காண ஒன்றிணைய ஜனாதிபதி...

தூண்டப்படுவதை புறந்தள்ளிவிட்டு, சகவாழ்வு மற்றும் சமத்துவத்திற்கு முன்னுரிமையளித்து செயற்படுமாறு ஜனாதிபதி தனது ட்விட்டர் பதிவினூடாக குறிப்பிட்டுள்ளார்.

## வன்முறைக்குப் பதிலாக...

முன்தினம்(10) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனவே இந்த இக்கட்டான தருணத்தில் அனைவரும் அமைதியாகவும் நிதானமாகவும் செயற்பட வேண்டும் எனவும் ஜனநாயகத்துக்காக போராடும் இளைஞர்கள் மற்றும் மக்கள் மீது தாக்குதல் நடத்திய ஆட்சியிலுள்ள எவருக்கும் எவ்வகையிலும் தப்பிக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## ஜனாதிபதி பதவி விலகினாலேயே...

சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்கத் தயார் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

"இந்த ஜனாதிபதி உள்நாட்டில் அல்லது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை,"எனதெரிவித்த அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்வாதிகளின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்க முடியாத ஜனாதிபதி ஒருவரின் இருப்பை மக்கள் கேள்விக்குள்ளாக்குகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## சட்டம், ஒழுங்கு சீர்குலைந்தால்...

ஒழுங்கை சிறந்த முறையில் பேணக்கூடிய அரசாங்கமொன்றை நியமிப்பது இன்றியமையாதது. குறுகிய காலத்தில் இவ்வாறான ஸ்திரமான நிலைமையை ஏற்படுத்த முடியாவிட்டால் நாடு மேலும் சீர்குலையும். இந்த நிலை இன்னும் சில நாட்களுக்கு நீடித்தால் 10 மணித்தியாலங்களுக்கு மேலான மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவர் எச்சரித்தார்.

அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டிப்பதாக தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் , நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படாவிட்டால் தாம் பதவியில் இருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## இடைக்கால நிர்வாகத்தை...

தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும், தற்போது பிரதமர் இல்லாத நிலையில் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக செயற்பட வேண்டும் என்பதே தமது முதன்மையான நிபந்தனை என்று அவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்க ஏனைய கட்சிகள் தயாரில்லை என்றால், இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்காமல் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளிக்கவும் தாம் தயார் என அனுரகுமார குறிப்பிட்டுள்ளார்

பாராளுமன்றத்தில் தமது கட்சிக்கு மூன்று உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த அரசியல் முடக்கத் தன்மையை போக்கி ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும் வரையில் குறைந்தது ஆறு மாதங்களுக்கு இடைக்கால அரசாங்கத்தை அமைக்க தாம் தயாராக உள்ளதாக அவர் கூறியுள்ளார்

மக்களின் விருப்பத்துடன் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அனுரகுமார தெரிவித்துள்ளார்.

## போலி தமிழ் தேசியவாதிகளை...

காரணமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர் தாயகத்தில் அவர்களைத் தாக்குவதையோ அல்லது அவர்களது அலுவலகங்களுக்குத் தீ வைப்பதையோ ஜனநாயக அரசியலில் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்களுக்கான சரியான தண்டனை அடுத்த பொதுத் தேர்தலில் இவர்களுக்கு வாக்களிக்காது முற்றாகப் புறக்கணித்து இவர்களை அரசியல் அநாதைகளாக்குவதே, சிங்கள தேசத்தின் பொருளாதார மோதலில் தமிழ்த் தேசம் சிக்குப்படாது அமைதியாக இருப்பதே உசிதமானது.

தமிழர் தாயகத்திலிருந்து சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவளித்த மக்களில் ஒருசாராருக்குத் திருந்துவதற்குச் சந்தர்ப்பமொன்றை வழங்கி அவர்களையும் தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் கருத்து உருவாக்கத்தை முன்னெடுப்பதே தமிழினத்தின் தேச விடுதலைக்கு வழிவகுக்கும், வலுசேர்க்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

கடந்த காலத்தில் தமிழ்த்தேசியத்திற்கு ஊறு விளைவித்து சிங்களத்தின் நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட்டு முன்னெடுத்த அரசுடன் இணைந்திருந்தவர்கள் மற்றும் போலித் தமிழ்த் தேசியவாதிகள் போன்றோரை எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகத் தோற்கடித்து தமிழ்த் தேச விடுதலைக்கு வலுசேர்க்க அனைவரும் சபதமெடுப்போம்.

அரசியல் தீர்வற்ற அபிவிருத்தியென்பது வெறும் மாயை என்பதை உணர்ந்து விடுதலை நோக்கிய பாதையில் விசுவாசமாகப் பயணிப்போமாக" இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய படைகளை... 03ஆம் பக்கத் தொடர்

அந்தப் பதிவில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், இந்திய எதிர்ப்பு குழுவினர் இலங்கையில் அதிகாரத்தை பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

## தொழிற்சங்க வேலை நிறுத்தம்... 03ஆம் பக்கத் தொடர்

தபால், ரயில்வே உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் கடமைக்குத் திரும்பவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.(ஸ)

## சஜித் பிரதமராவதற்கு...

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று இதனை அறிவித்துள்ளார்.

இதற்கமைய சஜித் பிரேமதாசவுக்கு ஆதவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பு தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டின் பல பாகங்களிலும்...

படையணியின் மோட்டார சைக்கிள் பிரிவு, கொழும்பு, புறக்கோட்டை, மிரிஹான, கிருலப்பனை, கொள்ளுப்பிட்டி முதலான பகுதிகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு உதவும் செயற்பாடுகள்...

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதையநிலைமையைஉன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் சமூக பதற்றங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் அக்கறை கொண்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

தமது நிதியக் கொள்கைகளுக்கு இணங்க இலங்கைக்கு உதவ தாம் கடமைப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

முன்னதாக பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது ஆட்சி மாறும்வரை தமது செயற்பாடுகளை சர்வதேச நாணய நிதியம் ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவை பாதுகாப்பது...

சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பான விஷேட ஊடகவியலாளர் மாநாடு முப்படைத் தளபதிகளின் பங்குபற்றுதலுடன் பாதுகாப்பு அமைச்சு தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று (11) இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மக்களின் பாதுகாப்பிற்காகவே இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர் என்றும் எனவே அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு, நாட்டில் வன்முறைகள் பாரதூரமானால் அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரம் இராணுவத்திற்கு வழங்கப்படுமே தவிர, அது ஒருபோதும் இராணுவ ஆட்சியாக மாறாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொது இடங்களில் கூட்டமாக...

அறிவித்துள்ளனர். சட்டத்துக்கு முரணாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்படும் அங்கு அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஒலிபெருக்கி மூலம் உரையாற்றிய பொலிஸார், நாட்டில் கடந்த 6ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டமும் திங்கட்கிழமை முதல் ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மைதானம், கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் ஒன்றுகூடுவது சட்டவிரோதமாகும். எனவே,பொது இடங்களிலோமைதானங்களிலோ கடலோரங்களிலோ மக்கள் கூடுவதை உடனடியாக நிறுத்துமாறும் அவ்வாறு கூடி இருப்பவர்கள் உடனடியாக அங்கிருந்து செல்லுமாறும் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர். இதை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்தனர்.

## மஹிந்த ராஜபக்ஷ திருமலை...

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கை தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த அவர் நாட்டில் தற்போதுகாணப்படும் நிலைமை இயல்பு நிலைமைக்கு திருப்பியதும் முன்னாள் பிரதமர் விரும்பும் இடத்திற்கு அனுப்பி வைக்க நடைவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் மாநாடு பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் முப்படைதளபதிகளின் பங்குபற்றுதலுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள பாதுகாப்பு அமைச்சு தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று (11) இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன இதனை உறுதிப்படுத்தினர்.

பாதுகாப்புச் செயலாளர் இங்குமேலும் விளக்கமளிக்கையில் :

நாட்டின் தலைவர் தொடக்கம் முன்னாள் தலைவர்கள் மற்றும் சகல பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது பாதுகாப்பு தரப்பினரது பொறுப்பு. மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ஆவார். அவர் முன்னர் இருந்த இடத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கூடியிருந்தனர். அங்கு சிலர் தீவைத்தனர். எனவே அப்போதைய நிலைமை மற்றும் அவரது பாதுகாப்பை கருத்திற்கொண்டே நாங்கள் அங்கிருந்து திருகோணமலை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றோம். இது நிரந்தரமானது அல்ல, தற்காலிகமானதே என்றார்.

எவர் தவறிழைத்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் தண்டனை வழங்க முடியும். மாறாக தண்டனைகளை நாம் வழங்க முடியாது என்றும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

## 2023 ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

### புத்தளம் பிரதேச சபை

புத்தளம் பிரதேச சபையின் 2023 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக புத்தளம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஆலோசனைகள் 2022 ஜுன் 30ம் திகதிக்கு முன் தலைவர், புத்தளம் பிரதேச சபை, மதுரங்குளி என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளுக்கு மற்றும் சமுக சங்கங்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**ஆர்.எம். அங்ஜன சந்தருவன் ரத்னாயக்க,**
**தலைவர்**
**புத்தளம் பிரதேச சபை**

## ஒத்திவைக்கப்பட்ட பகிரங்க ஏல விற்பனைக்கான மீள் அறிவித்தல்

### மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கியின் அனைத்துக் கிளைகளிலும், 2021 மார்ச் 08 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இன்னும் மீட்கப்படாத தங்க நகைகளை விற்பனை செய்வதற்காக, 2022 மே 07 ஆம் திகதியன்று திட்டமிடப்பட்ட பகிரங்க ஏல விற்பனை பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| திட்டமிடப்பட்ட திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|
| 2022 மே 14<br>மு.ப. 10.00 | வெள்ளவத்தை கிளை<br>இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை |

மேலே கூறப்பட்ட இடத்தில் ஏலத்தை நடத்துவதற்கும் ஏலத்தை இரத்து செய்வதற்கும் அல்லது ஒத்திவைப்பதற்கும் வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

சிரேஷ்ட உப தலைவர் / பிரதம செயற்பாட்டு அதிகாரி
DFCC வங்கி பி. எல். சி,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03

0112 350000 www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## குருணாகல் பிரதேச சபையின் 2023 வருடத்தின் வரவு செலவு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலுக்காக பரிந்துரைப்புக்களை பெற்றுக் கொள்ளல் சம்பந்தமாக பொது மக்களுக்காக விடுக்கப்படும் அறிவித்தல்

குருணாகல் பிரதேச சபையின் 2023 வருடத்தின் வரவு செலவு அறிக்கைக்காக தயாரிக்கப்படுகின்ற மூலதன செலவு தொடர்பான மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்திற்கு உட்படுத்தலுக்கான பரிந்துரைப்புக்களை பிரதேச சபை எல்லை குடியிருப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உங்களால் முன்வைக்கப்படும் பரிந்துரைப்புக்களை எழுத்து மூலமாக 2022 ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன், கையளிப்பு மூலமாக, தபால் மூலமாக, மின்னஞ்சல் மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக குருணாகல் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறும் வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் அறியத் தருகிறேன். பரிந்துரைப்புக்களை முன்வைத்தல் தொடர்பாக மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபையின் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை மேலதிகமாக அறியத் தருகிறேன்.

பிரதேச சபை எல்லை அபிவிருத்தி தொடர்பாக உங்கள் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பை மிகவும் பெருமிதமாக மதிக்கிறேன்.

**அசல நிமந்த விக்கிரமதிலக,**
**தலைவர்,**
**குருணாகல் பிரதேச சபை**

| | |
|---|---|
| **முகவரி** | **உடதிகன, குருணாகல்** |
| **தொலைபேசி இலக்கம்** | **0372222551** |
| **தொலைநகல் இலக்கம்** | **0372228197** |
| **மின்னஞ்சல்** | **kurunegalaps@gmail.com** |

சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

## விலைக்கோரல் அழைப்பு – தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணைத் தேவைப் படுத்தல்கள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | **சேவை** | | | | |
| 1 | அநுராதபுரம், பண்டாரவளை, கதிர்காமம், நுவரெலியா, பாசிக்குடா, கல்பிட்டி தேசிய விடுமுறை விடுதி மற்றும் ரசூல் தோட்டம் காணிகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்<br>SLTDA/RM/NC/NCB/Security-NHR/2022/12 | 7,500 | 165,000 | 23 மே - 10.00 மணிக்கு (1ஆம் மாடி) SLTDA பணிப்பாளர் சபை அறையில் | 2022 ஜுன் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |
| 2 | பெந்தோட்ட தேசிய விடுமுறை விடுதியிலுள்ள செயற்பாடுகள் மற்றும் பொதுவான சாக்கடை சுத்திகரிப்பு பொறித் தொகுதிக்கான பராமரிப்பு சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்தல்<br>SLTDA/RM/NC/NCB/O&M-Benthota/2022/13 | 7,500 | 240,000 | 24 மே - 10.00 மணிக்கு பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதியில் | 2022 ஜுன் 02ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு |
| 3 | பெந்தோட்ட தேசிய விடுமுறை விடுதிக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்<br>SLTDA/RM/NC/NCB/Security-NHR/2022/12-B | 5,000 | 155,000 | 24 மே - 11.00 மணிக்கு பெந்தோட்டை தேசிய விடுமுறை விடுதியில் | 2022 ஜுன் 02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |

2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மேற்படி தகைமை தகவுத் திறன்களின் பிரகாரம் இயைபுடைய வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112426800 (நீடிப்பு 305, 277) எனும் தொடர்பெண்ணிலும், பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் amilam@srilanka.travel மின்னஞ்சல் முகவரியில் இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 மே 12ஆம் திகதி முதல் 2022 ஜுன் 02ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை (விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில்) amilam@srilanka.travel / sltdaproc@srilanka.travel எனும் மின்னஞ்சல் முகவரிகள் ஊடாக சமர்ப்பித்ததன் பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும்.
5. மீளளிக்கப்படாத கட்டணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபையினால் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7119413 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: வரவுத் துண்டில் வைப்பாளர்களின் விபரம் மற்றும் வைப்பிற்கான காரணம் எனும் இடத்தில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' எனக் குறிப்பிட்டு விலைமனுவுடன் மூலப் பிரதியை இணைக்கவும்) கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்களை மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, தரை மாடியிலுள்ள முகக்கூட இடப்பரப்பில் (Lobby area) சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (PCA3 படிவம்) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டிருப்பதுடன் விலைமனுவின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி பிரகாரம் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தினொரு ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை வழங்கும் தகுதியை இழந்து விடுவார்.
12. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு கிரயச் செலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

## விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| | | | **சேவைகள்** | | |
| பிராந்தியம்-02<br>கிழக்கு | DGM(E)/QPPC/22/070<br>வாடகைக்கு டபிள் கப்<br>மின் அத்தியட்சகர் (விநியோக பராமரிப்பு பிரிவு) அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 01.06.2022 ம் திகதி<br>பி.ப.2.00 மணி | விநியோக பராமரிப்பு மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2223299 அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/09/020 | MS ‘ I ‘ Beam 300 X 150MM 32 KG/M 12M Length | 60,000.00 | 1,000.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/02/051 | Lubricant (HC 46 Lanka ) – 12,600 Liters | 47,600.00 | 1,000.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/052 | 4992 Liters, Transynd Synthetic Fluid Tes 295 (AN – 011001 ) | 162,500.00 | 3,500.00 | 02-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/02/054 | Lubricants ( 12600 Liters DS SAE 40 ) | 125,000.00 | 3,500.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/ PT/6305(MP) | Spares for Grove AMZ 131 XT – Aerial Work Platform | 30,000.00 | 1,000.00 | 09-06-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/ PT/6307(MP) | Spares for Caterpillar C – 15 Engine of RTG Cranes at JCT | 120,000.00 | 3,500.00 | 09-06-2022 மு.ப. 10.00 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/ PT/04/056 | Shirts Short / Long Sleeves - 2500 Nos -2022 | 25,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/12/051 | Spares for UNIC URV 340 (3Ton) Boom Trucks – 03 Nos. | 16,000.00 | 1,000.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/051 | Spares for Caterpillar C – 15 Engines of ZPMC 41T RTGC at JCT | 30,000.00 | 1,000.00 | 03-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/10/060 | Sensors for Caterpillar C32 Diesel Engines of Pilot 16,17 & 18 | 25,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/17/058 | 20 Nos. Roller Chain Super 160 102L for Gantry Travel | 27,000.00 | 1,000.00 | 06-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மே 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT

LAKE HOUSE

## மலைச்சாரல்

# மலையகத்தில் கடும் மழை; பல இடங்களில் மண்சரிவு அபாயம்

## ஊரடங்கு சட்டத்தினை மீறினால் கைது; பல இடங்களில் கடும் சோதனை





**ஹற்றன் விசேட நிருபர்**

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தினை மீறுபவர்களை கைது செய்ய ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் வீதி தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதற்கமைய ஹற்றன் மல்லிகை பூ சந்தி, மணிகூட்டு கோபுரம் அருகாமையில் மற்றும் எம்.ஆர்,டவுன், டிக்கோயா உள்ளிட்ட பல இடங்களில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது உரிய அனுமதிபத்திரமின்றி பயணம் செய்த வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் வாகனங்களும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டன.

ஒரு சில சாரதிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். ஊரடங்கு சட்டம் காரணமாக மலையக நகரங்கள் வெறிச்சோடி கிடந்ததுடன் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மாத்திரம் வீதியில் பயணிப்பதை காணக்கூடியதாகவிருந்தது. எனினும் தேயிலை தோட்டங்களில் தேயிலை கொழுந்து பறித்தல் உள்ளிட பெருந்தோட்டம் சார்ந்த தொழில்கள் வழமை போலவே இடம் பெற்று வருகின்றன.



அரச வெசாக் விழா நடைபெறவுள்ள பலாங்கொடை குரகல ரஜமஹா விகாரையில் கோபுரத்தில் புனித நினைவுச்சின்னங்கள் அடக்கம் செய்தல் மற்றும் ஜய ஸ்ரீ மஹா போதி கிளை நடுகை விழா அண்மையில் நிறைவுபெற்றது.
தம்பானை பழங்குடி இனத்தலைவர் உருவரிகே வன்னிலத்தோ தம்பானையிலிருந்து குரகல புனித பிரதேசத்திற்கு வந்தார். சமயச் சடங்குகளைச் செய்து அசாதிசா சாக்கியர் சுகத மகா சைத்தியத்தையும் வணங்குகிறார்.

(ஹாலிஎல விசேட நிருபர் )

**ஹற்றன் விசேட நிருபர்**

மத்திய மழை நாட்டில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. ஹற்றன், நோட்டன் நோர்வூட், பொகவந்தலாவை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களாக கனத்த மழை பெய்து வருகிறது.

நோட்டன் பகுதியில் நேற்று இரவு பெய்த கடும் மழை காரணமாக நேற்று (11) அதிகாலை மூன்று மணியளவில் நோட்டன் எண்ணெய் நிரப்பு நிலையமொன்றுக்கு மேலிருந்து பாரிய கட்டடம் ஒன்று சரிந்து வீழ்ந்து எண்ணெய் நிரப்பு நிலையத்தின் கட்டடம் ஒன்று பகுதியளவில் சேதமாகியுள்ளது.

கட்டடத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கரவண்டி, ஒரு வேன் ஆகியன சேதமடைந்துள்ளன.

மண்சரிவு ஏற்படும் போது அதில் எவரும் இல்லாமையால் உயிர்சேதங்கள் ஏற்படவில்லை.

இதேநேரம் நோட்டன் தியகல பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்து பல மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை வீதி போக்குவரத்து அதிகார சபையினால் வீதியில் கொட்டிக்கிடந்த பாரிய கற்கள் மற்றும் மண்ணை அகற்றியதன் காரணமாக போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளன. வீதியில் மேலும் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளமையால் அவ்விடங்களில் ஒரு வழி போக்குவரத்தே இடம்பெற்று வருகின்றது.

இதே நேரம் ஹற்றன் காசல் ரி ஊடான நோட்டன் வீதியிலும் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளன.

தற்போது மாலை வேளையில் மழையுடனான காலநிலை காணப்படுவதனாலும் பல இடங்களில் மண்சரிவு அவதானம் காணப்படுகின்றமையாலும் இவ்வீதிகளை பயன்படுத்து வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் வாகன சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். இதேவேளை நீரேந்து பிரதேசங்களில் பெய்த கடும் மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு தினங்களாக பெய்த கடும் மழை காரணமாக லக்ஸபான மற்றும் விமலசுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் நீர்த்தேக்கங்களின் கீழ் தாழ்நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு மின்சாரசபை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நீர்வற்றியதன் காரணமாக தென்பட்ட பழைய கட்டங்கள் மற்றும் சிறிய தீவுகள் ஆகியன தற்போது படிப்படியாக நீரில் மூழ்கி வருகின்றன.







## வேகக் கட்டுப்பாட்டு முறை இன்மையால் விபத்துக்கள் அதிகரிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி, பலாங்கொடை தினகரன் நிருபர்கள்)**

பலாங்கொடை கல்தோட்டை வீதியின் பல இடங்களில் முறையான வாகன வேகக் கட்டுப்பாடு முறை நடைமுறைப்படுத்தப்படாமையினால் பல இடங்களில் விபத்துகளும் உயிர்ச்சேதங்களும் அதிகரித்து வருவதாக பிரதேச பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இவ்வீதியின் தெஹிகஸ்தலாவ முதல் பலாங்கொடை நகரம் வரையிலான பகுதியிலேயே இந்நிலை அதிகமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பிரதேசத்தில் அதிகமான குடியிருப்புகள் சனநெரிசல் அதிகமாக காணப்படுவதுடன் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டை கட்டுப்படுத்துவதற்கும் முறையான தொடர் செயற்பாடுகள் காணப்படாமை இதற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதேசத்தில் 4 பாடசாலைகள் உட்பட தனியார் கல்வி நிலையங்கள், மதஸ்தலங்கள் காணப்படுவதால் அதிகமான பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் போக்குவரத்து செய்யும் இடமாகும்.







கொழும்பு மற்றும் அதனை சூழலுள்ள பகுதிகளில் நேற்று விசேட இராணுவ பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.இராணுவ கவச வாகனங்கள் கொழும்பு துறைமுக சுற்றுவட்டாரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை காணலாம்.....படங்கள் ருக்மல் கமகே

## நெருக்கடியான சூழல் நிலவினாலும் அனைவரும் ஒரே கொடியின் கீழ் இணைந்திருப்பதே புதிய மாற்றமாகும்

### வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர்

**மாவத்தகம தினகரன் நிருபர்**





நாட்டில் நெருக்கடியான சூழல் தென்பட்டாலும் மிகவும் அழகான காட்சி தென்படுகின்றது. மீண்டும் நாங்கள் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் வந்திருக்கின்றோம்.தேசிய கொடியை தூக்கிக் கொண்டு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர் என அனைவரும் ஒன்றாக இணைந்துள்ளோம். இதுதான் நாட்டினுடைய புதிய மாற்றமும் புதிய எழுச்சியுமாகும் என்று வயம்ப பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் அமிந்த பெரேரா தெரிவித்தார்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான மையத்தின் அனுசரணையுடன் பல்லின மக்கள் கலந்து கொண்ட நோன்புப் பெருநாள் சமூக கலாசார நிகழ்வு குருநாகல் சியாம்பலகஸ் கொட்டுவ அந் நூர் அரபுக் கல்லூரி மற்றும் சியம்பலகஸ்கொட்டுவ சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் சியம்பலாகஸ்கொட்டுவ ரிச்வி ரிசப்சன் மண்டபத்தில் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி செகுதாவூத் முனவ்வர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய வயம்ப பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் அமிந்த பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,..

30 வருடம் யுத்தத்தால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டோம்.அதற்குப் பின்னர் 2015 களில் சில தேவைகளுக்காக இன ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டது.

பொதுபலசேனா, சிங்கள மாசேனா பலகாய உள்ளிட்ட பல அமைப்புக்கள் தத்தம் தேவைக்காக தோற்றம் பெற்றது. அதன் நடவடிக்கையின் காரணமாக நாங்கள் எல்லோரும் அதற்குள் சிக்குண்டு பின் தள்ளப்பட்டோம். அதற்குப் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றது.

தற்போது நாட்டில் மிகவும் அழகான சூழல் உருவாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடி அல்லது வேறு பிரச்சினைகள் வந்தாலும் நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம். கோல்பேஸ் போராட்டத்தில் இருக்கும் ஒற்றுமை மற்றும் ஒழுக்கத்தை நாம் எல்லோரும் முன்னெடுத்துச் செல்வோம். தற்போது எமக்கிடையே காணப்பட்ட இன வேறுபாடு போதும். சிங்களம், முஸ்லிம், தமிழ் எனப்படுவோர் அனைவரும் ஒன்று.நாங்கள் எல்லோரும் ஒரு தாய் நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வோம்.எதிர்காலச் சந்ததியினரின் நலன்கருதி நாங்கள் எல்லோரும் ஒன்றுபடுவோம்.

## அலி சப்ரி ரஹீமின் வீடு, காரியாலயம் தீக்கிரை; புத்தளம் நகர பிதா கண்டனம்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் இல்லம் மற்றும் காரியாலயம் தாக்கி தீக்கிரையாக்கப்பட்டமை மனிதாபிமானமற்ற செயலாகும் என புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்தார். மக்களின் அறவழிப் போராட்டங்களை ஒடுக்க முனைவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.

விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற பொது மக்கள் மீது குண்டர்கள் தாக்குதல் மேற்கொண்ட சம்பவமானது மிகவும் கண்டிக்கத்தக்க காட்டுமிராண்டித்தனமான செயலாகும். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றவேளை வாழ்க்கைச் சுமையை தாங்கிக் கொள்ள முடியாமல் திண்டாடும் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி அறவழிப் போராட்டங்களை நடாத்தும் போது அதற்கெதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.



ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் கொழும்பு மட்டக்குளி எரிபொருள் விற்பனை நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்குமாறு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது. படம் வடகொழும்பு தினகரன் நிருபர்



மஜீட்புரம் இம்டாட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில்

# நோன்பு பெருநாள் விளையாட்டு விழா

(சவளக்கடை குறூப் நிருபர்)





மஜீட்புர ம் இம்டாட் விளை யா ட்டுக் கழகத்தினால் நோன்பு பெருநாளை முன்னிட்டு 25வருடங்களுக்கு பிறகு முதல்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழா மஜீட்புரம் பாடசாலை மைதானத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

மஜீட்புரம் இம்டாட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எம். பிறோஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.வீ.அமுனுகம பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதில் லெப்டினன் கேணல் அனஸ் அஹம்மட், GAFSO நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட், மஜீட்புரம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.முஸ்ஸமில், மஜீட்புரம் ஜூம்ஆ பள்ளிவாசல் தலைவர் எஸ்.எச்.ஆரிப்பின், மஜீட்புரம் ஜூம்ஆ பள்ளிவாசல் மௌலவி எம்.எச்.எம்.சஹ்ருக், மஜீட்புரம் அஷ்ரப் சனசமூக நிலையத்தின் தலைவர் எம்.எம்.தௌபீக், கிராமசேவை உத்தியோகத்தர் எம். சப்றாஜ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கபீர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். அப்துல் மஜீட், வர்த்தகள், விளையாட்டுக் கழகத்தின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மரதன் ஓட்டம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம், போத்தலில் நீர் நிரப்புதல், சங்கீத கதிரை, பாரம்பரிய விளையாட்டுகள் உள்ளிட்ட பல போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# விளையாட்டு சங்கங்களின் தேர்தல் 3 மாதங்களுக்கு நீடிப்பு

திருகோணமலை குறூப் நிருபர்

விளையாட்டு சங்கங்களின் பதவிக் காலம் மற்றும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான காலக்கெடுவை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தேர்தலை நடத்துவதற்கும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கும் ஆகஸ்ட் 31ஆம் திகதி கடைசி நாளாகும்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு விதிமுறைகளின்படி, விளையாட்டு சங்கங்கள் ஒவ்வொரு வருடமும் மே 31 அல்லது அதற்கு முன்னர் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்த வேண்டும் மற்றும் உறுப்பினர்களுக்கு வருமானம் மற்றும் செலவுகளை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் ஏற்கனவே உள்ள ஊழியர்களை நீக்கி புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அந்தத் திகதி, இது ஒரு கட்டாயப் பணி என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டிலுள்ள 26 பதிவு செய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்கள் ஊழியர்களை நீக்கி விட்டு புதிய அதிகாரிகளை இந்த ஆண்டு மே 31ம் திகதிக்குள் நியமிக்க வேண்டும் என்று விளையாட்டு அமைச்சு உத்தரவு பிறப்பித்திருந்தது.எவ்வாறாயினும் தற்போது நிலவும் சூழ்நிலையில் புதிய அதிகாரிகளை நியமித்து வருடாந்த பொதுக்கூட்டத்தை மே 31 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்துவது கடினம் எனவும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் உட்பட பல விளையாட்டு கழகங்கள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. பதவிக்காலம் மற்றும் பொதுக்கூட்டத்தை நீட்டித்துள்ளது.அந்த வர்த்தமானி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு கடந்த (8) இறுதி செய்யப்பட்டது.

இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தேனுக விதானகமகே கையொப்பமிடவுள்ளதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

“விளையாட்டுச் சங்கங்களின் தேர்தல் காலத்தையும், பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான கடைசி நாளையும் நீடித்து சிறப்பு வர்த்தமானி அறிவித்தலை முன்னாள் அமைச்சர் தயாரித்து வழங்கினார். அதில் அமைச்சர் கையெழுத்திட்டு வெளியிட வேண்டும்.

கையொப்பமிடவில்லை என்றால், தற்போது அமைச்சரவை கலைக்கப்பட்டதால் புதிய அமைச்சர் கையெழுத்திட வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தல் அனைத்து விளையாட்டு சங்கங்களுக்கும் வெளியிடப்படும் ”என்று பேச்சாளர் கூறினார். கடந்த ஆண்டு, கொரோனா நெருக்கடி காரணமாக, பல தேர்தல்களை நடத்த முடியவில்லை.

பின்னர், பதவிக் காலத்தை நீடித்த உத்தரவில் திருத்தம் செய்து, மே 31ம் திகதி அல்லது அதற்கு முன் நடக்க வேண்டும் என வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார்.

கொரோனா வைரஸ் பரவியதன் பின்னர் விளையாட்டு விதிமுறைகள் திருத்தப்படுவது இது நான்காவது முறையாகும், கடந்த ஆண்டு தேசிய விளையாட்டு சங்க தலைவர்களின் பதவிக்காலம் மற்றும் சிறப்பு பொதுக் கூட்டங்கள் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. அப்போது, விளையாட்டு சங்கங்களின் வரவு செலவு அறிக்கைகள் நிதியாண்டு முடிந்து இரண்டு மா தங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலையில், ஆறு மாதங்களாகவும், கண க்கு தணிக்கையாளரிடம் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் ஆறு மாதங்களாகவும் நீடிக்கப்பட்டது.

OBSERVER SLT-MOBITEL 44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :
வாக்களித்தவர் பெயர் :
முகவரி :
மொபைல் இல. :

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 14-05-2022 இல. 07

Non-Stop லொக்கா
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
www.sltmobitel.lk
SLTMOBITEL

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவன் ஷக்கிப் அம்பாறை மாவட்ட கிரிக்கெட் அணிக்கு தெரிவு

(ஆலங்குளம் தினகரன் , மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்)



அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவரும் அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகத்தின் கடின பந்து கிரிக்கெட் வீரருமான ஜே.எம்.ஷக்கிப் அம்பாறை மாவட்ட 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கிரிக்கெட் அணிக்காக விளையாடி வரும் ஜே.எம்.ஷக்கிப் லக்கி விளையாட்டுக் கழகத்தின் மூன்றாம் நிலை துடுப்பாட்ட வீரராக தனது திறமையை தொடர்ந்தும் நிருபித்து வருகின்றார்.

16 வயதுடைய ஜே.எம்.ஷக்கிப் கிரிக்கெட் விளையாட்டில் இளம் வயதிலிருந்தே ஆர்வமுள்ளவராக இருந்துள்ளதுடன் கொழும்பு டி. எஸ் சேனாநாயக்க வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலங்களில் கடின பந்து கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடியுள்ளார்.

சிறப்பான, எடுப்பான துடுப்பாட்ட வீரராக காணப்படும் ஷக்கிப் சிறந்த விக்கெட் காப்பாளராகவும் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு டி .எஸ். சேனாநாயக்க கல்லூரியில் கல்வி கற்ற நிலையில் சில காரணங்களுக்காக ஷக்கிப் அக்கல்லூரியிலிருந்து விலகியமை மிக கவலையான விடயமாகும்.

இருந்தபோதிலும் லக்கி விளையாட்டுக் கழகம் இவரது திறமையை இனம்கண்டு சிரேஷ்ட அணியில் வாய்ப்பை வழங்கியதுடன் அதற்காக கழகத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் அவர்கள் பல்வேறு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார்.

அட்டாளச்சேனை தேசிய பாடசாலையில் விளையாட்டு பயிற்றுவிப்பாளராக பணியாற்றிவரும் மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர் றஸ்பாஸ் அவர்கள் கடின பந்து கிரிக்கெட்டை ஆரம்பித்து வைத்ததுடன் சிறந்த பயிற்சிகளையும் வழங்கியுள்ளார்.

அவரது பயிற்றுவிப்பின் கீழ் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளை பெற்றுள்ளது. அதில் ஜே.எம்.ஷக்கிப் சிறப்பாக விளையாடி கூடுதலான ஓட்டங்களை பெற்றுள்ளதுடன், விக்கட் காப்பில் சிறந்த பிடிகளையும் எடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட 19 வயதுக்குட்பட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 13 வீரர்களில் ஷக்கிப் உள்வாங்கப்பட்டுள்ளார்.

# ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி,பலாலி விண்மீன் அணி லீக் சுற்றுக்குள் நுழைவு

(யாழ்.விளையாட்டு நிருபர்)



வல்வை விளையாட்டுக்கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவினை வைரவிழாவை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடாத்தும் வடமாகாண ரீதியிலான அணிக்கு 9 நபர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி,பலாலி விண்மீன் அணி வெற்றி பெற்று லீக் சுற்றுக்குள் நுழைந்தன.

வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில். (05/05/2022) திகதி இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதியது.



இதில் ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தகுதிபெற்றது.

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி சார்பாக லதீஸ்லஸ், டிந்துஜன், ஜெனிஸ்ரன் , தஷமலக்சன் தலா ஒவ்வொரு கோலினை பெற்றுக்கொடுத்தனர்.

ஆட்டநாயகனாக வலைப்பாடு ஜெகமீட்பர் அணி வீரார் டிந்துஜன் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக்கழக அணி மோதியது.

பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழக அணி

2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தகுதி பெற்றது..

பலாலி விண்மீன் அணி சார்பாக இருகோல்களையும் ஜோன்விஜித் பெற்றுக்கொடுத்தார்..

அண்ணாசிலையடி அணி சார்பாக பெறப்பட்ட ஒரு கோலினையும் ஆகாஸ் பெற்றுக்கொடுத்தார்.. போட்டியின் ஆட்டநாயகனாக பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழக அணி வீரார் ஜோன்விஜித் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 12ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.